# ல்லெழுத்துக்களில்

10556.

கா. ம. வேங்கடராமையா எம். ஏ.

# கல்வெழுத்துக்களில்...

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

ஆசிரியர் :

கா. ம. வேங்கட ராமையா M. A.,
செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

விலை ரூபா இரண்டரை

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**
௫௯. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு — ஜனவரி, 1963

ராயன் அச்சகம், சென்னை - 1

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR MADRAS-41.

உ

# முன்னுரை

*மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்* — *குறள்*

கல்வெட் டாராய்ச்சியால் கண்ட செய்திகளின் தொகுப்பு, இந்நூல்.

கலைமகள், குமரகுருபரன், ஞான சம்பந்தம், திருக்கோயில் முதலாகிய இதழ்களிலும் பிறவற்றிலும் யான் எழுதி வெளிவந்தவை, இதில் இடம் பெற்றுள்ளன. அவற்றைப் பதிப்பிக்க இசைவு தந்தமைக்கு அவ்விதழாசிரியர் கட்கு என் நன்றி.

இந்நூலை அச்சிடத் தொடங்கிய போழ்து பூதவுடலை நீத்த என் தாய்க்கு இந்நூலை உரிமைப் படுத்துகின்றேன்.

சிவமஸ்து.

கா. ம. வேங்கட ராமையா
திருப்பனந்தாள்.
மார்கழித் திருவாதிரை, 6-1-1966

# இதனுள்...

| கல்லெழுத்துக்களில் | | பக்கம் |
|---|---|---|
| கூத்து | ... | 1 |
| மருத்துவசாலைகள் | ... | 16 |
| குகைகள் | ... | 23 |
| திருப்பதியம் விண்ணப்பித்தல் | ... | 33 |
| நாலாயிரப் பிரபந்தம் | ... | 46 |
| ஸ்ரீ ருத்ராத்யயனம் | ... | 57 |
| சுந்தரர் | ... | 75 |
| திருவிரையாக்கலி | ... | 87 |
| ஆரம்பூண்டான் | ... | 93 |
| தவப்பெருந் தேவு செய்தார் | ... | 97 |
| திருவெம்பாவை விண்ணப்பித்தல் | ... | 100 |

# கூத்து *

## முன்னுரை

முத்தமிழில் இயற்றமிழும் இசைத் தமிழும் இயைந்து இலங்குவது கூத்து ; " கூத்தாட் டவைக்குழாத் தற்றே " என்று வள்ளுவனாரும் கூத்தைக் குறித்துள்ளார். சிலப் பதிகாரம் அரங்கேற்றுகாதை, அதன் உரை ஆகிய வற்றினின்று கூத்துக்கலை குறித்துப் பல செய்திகளை அறி கிறோம். பண்டைக் கூத்து முறைகளை விளக்கிப் பல நூல்கள் இருந்தனவேனும் அவற்றுள் ஒன்றுதானும் இந் நாளில் நமக்குக் கிடைத்திலது. எனினும் கூத்துக்கள் பலவற்றைப் பற்றிக் கல்லெழுத்துக்களினின்று சில செய்திகள் அறியப்பெறுகின்றன. சாந்திக் கூத்து, சாக்கைக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழக் கூத்து ஆகிய கூத்துக்கள் நிகழ்த்தியமை, அவற்றை ஆடியோர் நிலை முதலியவற்றைக் குறித்த விவரங்களையும், அக்கூத்து நிகழ்த்திய ஆடல் வல்லார்க்கு அளிக்கப்பெற்ற கூத்தக் காணி, நட்டுவக் காணி முதலியவற்றைக் குறித்த பல விஷயங்களையும் கல்லெழுத்துக்களில் பரக்கக் காணலாம். சில செய்திகளை இனிக் காண்போம்.

## சாந்திக் கூத்து

இது குறித்துச் சிலப்பதிகார உரையாசிரியர் எழுதி யது (சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை, வரி 12, உரை) பின்வருமாறு :—

---

* கலைமகளில் வெளி வந்தது.

" சாந்திக் கூத்தே தலைவன் இன்பம்
ஏந்திநின் றாடிய ஈரிரு நடம்அவை
சொக்கம் மெய்யே அவிநயம் நாடகம்
என்றிப் பாற்படூஉம் என்மனார் புலவர்"

என்பதால் 'நாயகன் சாந்தமாக ஆடிய கூத்துச் சாந்திக் கூத்து எனப்படும். இவற்றுள், சொக்கம் என்றது சுத்த நிருத்தம்; அது நூற்றெட்டுக் கரணம் உடையது.

மெய்க் கூத்தாவது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். இவை மெய்த்தொழிற் கூத்தாகலின் மெய்க் கூத்தெனப்பட்டன. இவை அகச்சுவை பற்றி எடுத்தலின் அக மார்க்கம் என நிகழ்த்தப்படும்.

அகச்சுவையான இராசதம், தாமதம், சாத்துவிகம் என்பன. " குணத்தின் வழியது அகக் கூத்தெனப் படுமே" என்றார் குண நூலுடையார்; "அகத்தெழு சுவையான் அகமெனப் படுமே " என்றார் சயந்த நூலுடையார்.

அவிநயக் கூத்தாவது கதை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபம் செய்யும் பலவகைக் கூத்து.

நாடகம் - கதை தழுவி வரும் கூத்து.

### திருவேங்கை வாசல்

திருவேங்கை வாசல் கல்லெழுத்துக்களில் மூன்று, மேலே கூறிய சாந்திக்கூத்து ஆடுவதற்கு நிபந்தம்

அரசன் கண்டு வியக்கும் வண்ணம் இக்கூத்து நிகழ்த்தி ஞள் என்பதும் இக் கல்லெழுத்தால் அறியலாம்.

வீரராசேந்திர சோழனது திருவொற்றியூர்க் கல்வெட்டு ஒன்று[6], மணலி என்னும் ஊரிலிருந்த 60 வேலி நிலத்தை வீரராசேந்திர விளாகம் என்னும் பெயர் அமைத்து அரசனது ஆயுஷ்யார்த்தமாகவும், அரசியாரது திருமாங்கலியத்தைக் காத்தற்பொருட்டும், அவருடைய குழந்தைகளின் நலன்பொருட்டும், திருவொற்றியூர்த் திருக்கோயிலில் சில தருமங்கள் செய்ய ஏற்பாடு செய்ததை உணர்த்துகின்றது. திருப்பள்ளி எழுச்சிக்காகவும், திருவாதிரைத் திருநாளில் திருவெம்பாவை விண்ணப்பம் செய்வதற்காகவும், நடித்தும் பாடியும் தொண்டு செய்து வந்த 22 தளியிலார்க்கும், ஓர் ஆடலாசானுக்கும் அகமார்க்கத்தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் 16 தேவரடியார்களுக்கும் அளித்தற்பொருட்டு இந்நில வருமானம் ஒதுக்கப் பெற்றது. இக் கல்லெழுத்தினின்று தேவாரங்கள் பாடும் பொழுது சுவை பொருந்தச் சத்துவம் தோன்ற அபிநயத்தோடு பாடப் பெற்றன என்றும் அறிகிறோம்.

வரிக்கோலம்; சந்திக் குனிப்பம் ; சொக்கம்

வரி என்பது விலக்குறுப்புப் பதினன்கனுள் ஒன்று;[7] வரி எட்டு வகைப்படும்;[8] சொக்கம் என்பது சாந்திக் கூத்துள் ஒரு வகை. சந்திக் குனிப்பம் என்பதும்

6. 128 of 1912.

7. சிலப். அடியார்க்கு நல்லாருரை-பக்கம் 82.

8. ஷை ஷை -பக்கம் 88.

சாந்திக் கூத்தே போலும். இவை குறித்து இராஜ நாராயணச் சம்புவராயரது 5 ஆவது ஆட்சியாண்டுக் குரிய[9] திருவொற்றியூர்க் கல்லெழுத்துச் சில செய்திகளைக் கூறுகின்றது[10]

எம்மண்டலமும் கொண்டருளிய பெருமாள் சுந்தர பாண்டிய தேவர் காலத்தில், கொத்தப்பராயர் ஆன வாணராயர் அதிகாரியாய் இருந்த நாளில், திருவொற்றி யூர்த் திருக்கோயிலில் பதியிலார் பலர் நியமிக்கப் பெற்றனர். அவர்களுள் பலர் இறந்து போனார்கள். ஆகவே பதியிலார்க்கு உதவியாகச் சில இஷபத் தளியி லாரை நியமித்தனர். தேவரடியார் இதுகாறும் செய்து வந்த திருவலகிடல், திருமெழுக்கிடுதல், தளிகை விளக் குதல், அமுதுபடிக்கு அரிசி கழுவுதல் முதலிய வேலை களைச் செய்ய வேண்டுவதில்லை; பதியிலார் சந்திக் குனிப்பம் இடும்பொழுது தேவரடியார் நாச்சியாருக்குச் சந்திக் குனிப்பமிட வேண்டும்; பகல் ஓலக்கத்தில் வெண் சாமரமும் கவரியும் பணிமாறுமிடத்தும் பதியிலார் முன்பும் தேவரடியார் பின்பு மாகப் பணிமாற வேண்டும்; தேவரடியார் திருநீற்றுக் காப்பும் புஷ்பத்தளிகையும் எல்லா இடங்களிலும் எடுக்க வேண்டும்; அப்பொழுது இஷபத் தளியிலார் அக மார்க்கமும் வரிக் கோலமும் ஆட வேண்டும்; பதியிலார் சொக்கம் ஆடும் பொழுதும் சந்திக் குனிப்பம் இடும் பொழுதும் இஷபத்

9. சகரயாண்டு 1265-6; A.R.E. 1913; Page 127, Paragraph 67.

10. 212 of 1912; No. 525 of South Indian Temple Inscriptions Vol. I, Page 511-13.

தளியிலார் பாடுதல் வேண்டும் ; பதியிலார் பாடும் பொழுது இஷபத் தளியிலார் பாடல் வேண்டும் ; திரு வெண்சாமரமும் திருவந்திக்காப்பும் இஷபத் தளியிலார் எடுக்க வேண்டியதில்லை ; பதியிலார் ஆண்டொன்றுக்கு 30 கலம் நெல் பெறுவாராகவும்; தேவரடியார் நாளொன் றுக்கு நாழிச்சோறு பெறுவாராகவும்—இவ்வாறு ஏற் பாடுகள் செய்யப்பெற்றன.

வரி என்பது விலக்குறுப்புப்[11] பதினான்கனுள் ஒன் றென்றும், அது எட்டு வகைப்படும் என்றும், வரியாவது அவரவர் பிறந்த நிலத் தன்மையும் பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தல் என்றும் கூறுவர் அடியார்க்கு நல்லார்.

இக் கல்லெழுத்தினின்று சாந்திக் கூத்தின் வகை களைத் தளியிலாரும் இஷபத் தளியிலாரும் நிகழ்த்தி வந்தனர் என்றும், இவர்களுள் இஷபத் தளியிலார் சிறந் தவர் என்றும் அறிகிறோம்.

## திருவிடை மருதூரில் ஆரியக் கூத்து *

இரண்டாம் ஆதித்தன் காலத்தில் திருவிடை மரு தூரில் கித்தி மறைக்காடனை திருவெள்ளறைச் சாக்கை என்பவன் இருந்தான். அவன் தைப்பூசத் திருநாளில்

---

11. விலக்குறுப்பு - தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும், அக் கதையை நடாத்தியும், முன்பு செய்த கதைக்கே உறுப்பாகுவது ; சிலப். பக். 89.

* புராண இதிகாசக் கதைகள் தழுவி வரும் கூத்து, ஆரியக் கூத்து-மு. ரா. ஆராய்ச்சித் தொகுதி, பக். 453. அடிக் குறிப்பு.

ஒரு தடவையும், அடுத்து மூன்று நாட்களும், வைகாசித் திருநாளின் பிற்றை நாட்டொடங்கி மூன்று நாட்களும், ஆக மொத்தம் ஏழு தடவை திருவிடை மருதில் உடையார் திருமுன் ஆரியக்கூத்து ஆடுவதற்குப் பதினாற் கலம் நெல் பெறுவதற்காக ஒரு வேலி நிலம் ஒதுக்கப் பெற்றது. இங்ஙனம் திருவிடைமருதூர்க் கல்லெழுத்து ஒன்று பகர்கின்றது.[12]

## திருவாவடுதுறையில் ஆரியக்கூத்து-சாக்கைக் காணி

இனிப், புரட்டாசித் திருவிழாவில் திருவாவடுதுறை எம்பெருமான் . திருகோயிலில் திருமூல நாயனரது நாடகமும், ஆரியக் கூத்து ஏழு அங்கமும் ஆடுவதற்குக் குமரன் ஸ்ரீகண்டன் என்பவர்க்கு நிருத்திய போகமாக நிலம் அளிக்கப் பெற்றது என்றும், அவன் சாக்கைக் காணி உடையவன் என்றும், முதலாம் இராசராசனது 9 ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தில் குறிக்கப் பெற்றுள்ளது.[13]

## மானம்பாடியில் தமிழ்க் கூத்து-கூத்தக் காணி

முதற் குலோத்துங்க சோழனது 18 ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தினின்று[14] தமிழ்க் கூத்து ஆடுவது குறித்து அறியப் பெறுகின்றது. மிழலை நாட்டு வீரநாராயணபுரத்தில் கைலாசமுடைய மகாதேவர் கோயிலில், சித்திரைத் திருவிழாவில் 5 தடவை தமிழக்

12. S. I. I. Vol. V No. 718.
13. 120 of 1925.
14. 90 of 1932.

கூத்து நிகழ்த்த, விக்ரமாதித்தன் திருமுதுகுன்றன் ஆன விருதராச பயங்கர ஆசார்யன் என்பவர்க்கு நாகன் பாடியில் கூத்தக் காணியாக நகரத்தாரும் கோயிலாரும் நிலம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## சாக்கைக் கூத்து

கீழைப் பழுவூரில் பரகேசரிவர்மனது ஆறும் ஆட்சி யாண்டுக் கல்லெழுத்து,[15] திருவாலந்துறை நல்லூரில் அற்பசித் திங்களில் திருவிழாவில் அசுவதி நாளில் சாக்கைக் கூத்து மூன்று அங்கங்கள் நிகழ்த்த ஆலையூர்ச் சாக்கைக்கு $1\frac{1}{2}$ கழஞ்சு பொன்னும் மூன்று கலநெல்லும் கொற்று அளித்ததாகக் கூறுகின்றது.

முதல் இராசேந்திரனது 29 ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக்குரிய காமரச வல்லிக் கல்லெழுத்து[16] மார்கழி வைகாசி மாதங்களில் திருவாதிரைத் திருநாட் களில் மூன்று முறை சாக்கைக் கூத்து ஆடச் சாக்கை மாராயன் விக்ரம சோழன் என்பார்க்குக் காமரசவல்லிச் சதுர்வேதி மங்கலத்தார் நிலம் அளித்தனர் எனப் பகர்கின்றது.

## கூத்தச் சாக்கையன்

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் கொணர்ந்து வஞ்சிமாடம் புகுந்தனன்; ஓலக்க மண்டபம் செல்லும்போது இடையிலுள்ள நாடக அரங்கத்து நிகழ்த்தப் பெற்ற கூத்தொன்றைக் கண்டான்; அந்தக்

15. 250 of 1926.
16. 65 of 1914.

கூத்து, கூத்தச் சாக்கையன் என்பவனால் நடிக்கப் பெற்றது. அவன் நடித்துக் காட்டிய கூத்து, கொட்டிச் சேதம்[17] எனப் பெற்றது. இதனை,

"உமையவள் ஒருதிற னாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து"

என வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

## நட்டுவக் காணி

நித்த • விநோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத்து ஆயிரத் தளிப்பால் ஸ்ரீ பராந்தக தேவீச்சரத்து நட்டுவக் காணியும், மெய்ம்மட்டுக் காணியும் யோர்வியக் காணி யும் உடைய நித்தவிடங்கன் மல்லையன் என்று ஒருவன் இருந்தான். அவன் இறந்துவிட்டதும் முதல் இராசேந் திரனது 26 ஆம் ஆட்சி ஆண்டில் அந்த நித்தவிடங்கன் மல்லையனுடைய மைத்துனன் நங்காந்தர்வன் அரையன் ராஜராஜனை முடிகொண்ட சோழ வாச்சிய மாராயன் நியமிக்கப்பெற்று, அவனும் அவன் வர்க்கத்தாரும் நட்டுவக்காணியை அநுபவிக்குமாறு உத்தரவு பிறப் பிக்கப் பெற்று, 30 ஆவது ஆட்சியாண்டில் கல்லில் வெட்டப்பட்டது. இச் செய்திகளைக் கண்டியூர்ச் சாசனத்திலிருந்து அறிகிறோம்.[18]

---

17. திரிபுரம் தீ மடுத்தெரியக் கண்டு வென்றிக் களிப்பால் உமையாளுடன் ஆடிய கூத்து; இது கொட்டி எனவும், கொடுங்கொட்டி எனவும் பெறும்; இது பதினொரு புற நாடகங்களில் ஒன்று.

18. S. I. I. Vol. V. No. 579.

இனி இரண்டாம் இராசேந்திரனின் 5 ஆம் ஆண்டுக்குரிய மேலப்பழுவூர்ச் சாசனத்தினின்று[19] ஓர் ஆடலாசிரியனுக்கு நட்டுவக் காணி அளித்த செய்தி தெரிய வருகின்றது.

தேவன் உதய நாயகன் என்பவரிடமிருந்து அவனுக்குரிய நட்டுவக் காணியைக் குலோத்துங்க சோழ நிருத்தப் பேரரையன் என்பான் விலைக்கு வாங்கித் தன் மகளுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்தான்; அவளுடைய கணவன் மற்றப் பதியிலார் போலக் கோயிலில் தொண்டு செய்யவும், அதற்குரிய உரிமைகளை அநுபவிக்கவும் உரிமை பெற்றிருந்தான். இச் செய்திகளை மூன்றும் குலோத்துங்க சோழனது திருச் சோற்றுத் துறைக் கல்லெழுத்து[20] அறிவிக்கின்றது.

இனி இச் சோழனுடைய 12 ஆம் ஆட்சியாண்டுக் குரிய திருவிடை மருதூர்க் கல்லெழுத்திலும் (S. I. I. Vol. V. No. 76; 142 of 1895) ஷை குலோத்துங்க சோழ நிருத்தப் பேரரையன் பேசப் பெறுகிறான். இவன் திருவிடை மருதூர்க் கோயிலில் உடுக்கை வாசிப்பார் பங்கு காணியுடைய எண்ணாயிரியான் என்கிறவன் பக்கல் நட்டுவரில் இக் குலோத்துங்க சோழ நிருத்தப் பேரரையன் விலைகொண்டு அநுபவித்து வருகிற பங்கு இரண்டும், இவன் விலைகொண்ட பிரமாணப் படியே இவனும் இவன் வர்க்கத்தாரும் காணியாய் அநுபவிக்கு மாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

---

19. 361 of 1924.

20. 206 of 1931; S. I. T. I. No. 1008.

ஆற்றூரில்

கி. பி. 1249 இல் அரசனான விக்கிரம பாண்டியனது ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆற்றூரில் ஒரு நாடகசாலை இருந்தது என்றும், திருக்கோயிலில் ஆவணித் திருநாளில் ஒரு நாடகம் நடத்தத் திருமேனி பிரியாதான் என்றவருக்கு இரண்டுமா நிலம் கூத்தாடு காணியாகக் குன்றுமொழிச் சிங்கப் பிரானான குருகுலத்தரையன் என்பவனால் அளிக்கப் பெற்றது என்றும் அறியப் பெறுகின்றது (Page 77 of ARE for 1929—30; 44 and 445 of 1929—30).

சித்தலிங்க மடம்

இவ்வூரில் கன்னரதேவனது 18 ஆம் ஆட்சி யாண்டுக் கல்லெழுத்துள்ளது. திருப்புலிப் பகவர் நிருத்த விடங்கி என்னும் தேவரடியார்க்குச் சிற்றிங்கூர் அவையினர் கோடியூர் என்ற ஊரில் நிலம் அளித்தனர். அந்நிருத்த விடங்கியாரும் அவர் வமிசத்தவரும் இறைவன் திருவுலாப் போதுங்கால் நடித்தல் வேண்டி இந் நிலம் அளிக்கப் பெற்றது (370 of 1909).

நட்டுவ நிலை

மூன்றும் குலோத்துங்கனது 23 ஆம் ஆட்சி யாண்டில் சோணாட்டுத் திருக்கடவூர்ச் சிவாலயத்து வரையப்பட்ட சாசன மொன்றில் (255 of 1925) அவ் வாலயத்தே நடத்தற்குரிய நட்டுவ நிலை என்ற விருத்திக்குக் கால விநோத நிருத்தப் பேரரையன் ஆன பாரசவன்[21] பொன்னன் என்பானை நியமித்தல் வேண்டி அச்சோழ வேந்தனிடம் அவனது அன்புக்குரிய

---

21. பார சிவன் K. A. N. COLAS Part II Page 698.

புலவரான வீராந்தப் பல்லவரையன் [22] என்பார் விண்ணப்பித்துக் கொண்டார் என்றும், அப்புலவர் விருப்பத்தின்படி அவ்விருத்தி நடத்துமாறு மேற் கூறிய நிருத்தப் பேரரையன் அரசாணையால் நியமனம் பெற்றனன் என்றும் கூறப் பெற்றுள்ளன. [23]

## இராஜராஜேசுவர நாடகம்

இது முதல் இராசராசன் காலத்து இயற்றப்பெற்ற நாடக நூல்; இராசராசனது பிறப்பு வளர்ப்புக்களையும், வீரம் தியாகம் முதலிய அருஞ்செயல்களையும், அவன் தஞ்சையில் இராசராசேச்சுரமான பெரிய கோயில் கட்டப் பெற்ற வரலாறுகளையும் பற்றிப் பாடப் பெற்றதாதல் வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். [24] வைகாசிப் பெரிய திருவிழாவில் தஞ்சைப் பெரிய கோயிலில் நடித்துக் காட்டுவதற்குச் சாந்திக் கூத்தன் திருவாளன் [25] திருமுதுகுன்றன் ஆன விஜய ராஜேந்திர ஆசார்யனுக்கும் அவன் வர்க்கத்தார்க்கும் இரண்டாம் இராசேந்திர சோழன் 120 கலம் நெல் நிபந்தம் அளித்தான். இச்செய்தி தஞ்சையிலுள்ள இரண்டாம் இராசேந்திர சோழனது 6 ஆவது ஆட்சியாண்டுக் கல்லெழுத்தால் அறியலாம் (55 of 1893; S. I. I. Vol II No. 67).

## திருப்பந்தணை நல்லூர்

முதல் இராசராசன் காலத்தில் திருப்பந்தணை நல்லூர்க் கோயிலில் நட்டுவப்பங்கு மெய்ம்மட்டுப்

---

22. வீர நடப்பல்லவரையன் Colas Part II P. 698
23. மு. ரா. சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம் 87-88.
24. மு. ரா. சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம் 48-49.
25. 'திருவாலன்' என்பது கல்வெட்டில் கண்ட சொல்.

பங்கு[26] இவைகளை உடையவனாய் இருந்தவன், ஹாஸ்யன் விக்கிரமாதித்தன் அச்சனான ராசராச நாடகப் பெரியன் ஆவான். இராசராச நாடகப் பெரியன் என்ற பட்டம் இராசராச நாடகத்தில் இவனுக்கிருந்த பெரும் புலமையை விளக்கும்.[27]

நாடக சாலைகள்

இதுகாறும் கூறியவாற்றால் ஆரியக் கூத்தும், தமிழக் கூத்தும், சாக்கைக் கூத்தும், சாந்திக் கூத்தும் கோயில்களில் திருவிழாக் காலங்களில் சிறந்த ஆடல் வல்லார்களால் நடிக்கப் பெற்றமை தெளிவாகும். இங்ஙனம் ஆடல்கள் நிகழ்த்த அவ்வத் திருக்கோயில் களில் பெரிய நாடக சாலைகள் இருந்தன என்றும் கல்லெழுத்துக்கள் விவரிக்கின்றன. திருவிடை மருதூரில் ஒரு நாடகசாலை இருந்தது. அதில் அச் சபை யினர் கூடித் தங்கள் அலுவல்களை நடத்தினர் (199 of 1907; S. I. I. III and 157 of 1895 S. I. I. V, 721). அத்தாமன் ஐயாறனான கண்டதோள் கண்டப் பையன் என்பான் திருவதிகைத் திருக்கோயிலில் நாடகசாலை மண்டபம் அமைத்து அதில் விளக்கு எரிக்க 96 ஆடுகளை அளித்த செய்தி உத்தம சோழனது 14 ஆம் ஆட்சி யாண்டுக் கல்லெழுத்து உணர்த்துகின்றது (398 of 1921). திருவாவடுதுறையில், ஒரு நாடகசாலை இருந்தது; அது நானாவித நாடகசாலை எனப் பெற்றது. அதனைப் பாதுகாத்தற்கு நிபந்தமும் அளிக்கப்பெற்றிருந்

---

26. மெய்ம்மட்டு—நட்டுவத்துக்கு மிருதங்கம் வாசிக்கும் உரிமை.

27. இரண்டாம் திருமுறை—தருமபுர ஆதீனப் பதிப்பு பக்கம் 95.

தது (152 cf 1925). அங்குக் கூத்தாடக் கடவார் சிலர் இருந்தனர்.

முடிப்புரை

இசை நாடகங்கள் எந்த அளவு மக்கள் ஆதரவும் அரசர் ஆதரவும் பெற்றிருந்தன என்பதைக் குறித்து மேம்போக்காகக் கல்லெழுத்துக் குறிப்புக்களைக் கண்டாலும் அறிந்து கொள்ளலாம். ஆடலாசிரியர்கள் மிகவும் சிறப்பிக்கப் பெற்றிருந்தனர்; ஆடவரும் பெண்டிரும் ஆடல் பாடல்களிற் சிறந்து விளங்கினர்; இவர்கள் முத்தமிழிலும் வல்லுநராய் இருந்தனர்; அரசர் அவர்களது நடிப்புக்களைக் கண்டு மகிழ்ந்தனர்; பெண்பாலார்க்குத் தலைக்கோற் பட்டமும் ஆண்பாலார்க்கு நிருத்தப் பேரரையன், மாராயன் முதலிய பட்டங்களும் அளிக்கப் பெற்றன. அவர்களுடைய கலையைப் புகழ்ந்து அவர்கள் பெயரை ஊருக்கு இட்டு வழங்கினர்; கூத்து ஒன்றுக்கு 2 கல நெல் சன்மானமாக அளிக்கப் பெற்றது; சில சமயங்களில் ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப் பெற்றது. ஆண்டொன்றுக்கு இத்தனைக் கூத்து ஆடவேண்டுமென்று இருப்பினும், பிற சமயங்களில் அவ்வாடலாசிரியர் வேறு இடங்களில் தம் தொழில் திறனைக் காட்டிப் பொருளீட்டலாம்; திருப்பதிகங்களும் சத்துவம் தோன்ற நடித்துப் பாடப் பெற்றன; கூத்துவல்லார் மக்களிடையே பெருமதிப்புடன் விளங்கினர்; நட்டுவநிலை அல்லது நட்டுவக்காணி கொடுக்கப் பெற்றுப் பரம்பரையாக அநுபவித்தனர். இத்தகைய செய்திகளால் நாகரிகக் கலைகள் தமிழகத்துப் போற்றப் பெற்றமை அறிந்து மகிழ்வோமாக!

# மருத்துவ சாலைகள்*

## தோற்றுவாய்

பண்டைத் தமிழர் மருத்துவக் கலையில் வல்லுநர்களாக விளங்கியிருந்தனர். அவர்களுடைய மருத்துவ அறிவுக்குத் திருக்குறள் "மருந்து" என்ற அதிகாரமே சான்று பகரும். மருத்துவன் தாமோதரனார் என்ற சங்கப்புலவர் சிறந்த மருத்துவராகத் திகழ்ந்திருத்தல் வேண்டும்.

> " சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
> மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்..."

என்ற திருவள்ளுவமாலைச் செய்யுள் அவருடைய மருத்துவ அறிவினைத் தெற்றென விளக்கும். திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலிய நூற்பெயர்கள் மருத்துவ அறிவின் அடிப்படையில் இடப்பெற்ற பெயர்களேயாம். மருத்துவ அறிவு மாண்புற விளங்கிய தமிழ்மக்களைக் குறித்தும், அவர் மருத்துவத் தொண்டாற்றிய ஆதுலர் சாலைகளைக் குறித்தும், கல்லெழுத்துக்கள் பல செய்திகளை அறிவிக்கின்றன.

## மருந்துச் செடிகள்

பச்சிலைகளாலே பல நோய்களைத் தீர்த்தனர் பண்டை மருத்துவர்! "மருந்தாகித் தப்பா மரத்தற்றால்" என்ற குறட் பகுதி, மரங்களின் இலைகளும் பட்டையும்

---

* ஞானசம்பந்தத்தில் வெளிவந்தது.

வேரும் மருந்தாகிப் பயன்படுதலைத் தெரிவிக்கும். பல்லவர் ஆட்சிக்காலத்தில் இத்தகைய மூலிகைகளைப் பயிரிட அரசாங்கத்தாரிடமிருந்து உரிமைபெற வேண்டியிருந்தது. செங்கொடி என்பது மிகச் சிறந்த மருந்துக் கொடி. இது பல வகை நோய்களைப் போக்கவல்லது. இதனைப் பயிரிடுவோர் "செங்கொடிக்காணம்" என்ற வரிசெலுத்தினர். கருசராங்கண்ணி பல நோய்களைத் தீர்க்கவல்லது. இதைப் பயிரிடவும் "கண்ணிட்டுக் காணம்" என்ற வரி செலுத்த வேண்டியிருந்தது. [1]

## சுந்தரசோழவிண்ணகர் ஆதுலர்சாலை

இது குந்தவையாரால்[2] தன் தந்தை முதல் இராசராசன் நினைவாகத் தஞ்சாவூரில் அமைக்கப்பெற்ற இலவச மருத்துவ சாலை. பண்டாரவாடையிலுள்ள முதலாம் இராசேந்திரனின் 3ஆம் ஆண்டுக் கல்லெழுத்து ஒன்று இவ் வாதுலர்சாலையை நடத்துவதற்காக, 70 காசு கொடுத்து 9 மா நிலம் இறையிலியாக வாங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இம் மருத்துவ நிலையத்தில் இருந்த வைத்தியர் "சவர்ணன் அரையன் மதுராந்தகன்" என்ற பெயருடையவர். [3] இம் மருத்துவ சாலைக்கு விடப்பெற்ற வைத்தியபோகம் போதாமை கண்டு இக் குந்தவையார் இன்னும் மனைகள் வாங்கி இம்மருத்துவ சாலைக்கு அளித்ததாகவும், முன் அளித்த நிலத்தையும்

1. இராசமாணிக்கம்-பல்லவர் வரலாறு-பக்கம் 234-5.

2. முதல் ராசராசனின் தமக்கையார்; இவரைப் பற்றிய விரிவான வரலாற்றைக் "குமரகுருபரன்" மலர் 8, இதழ் 1, பக்கம் 62-70 இல் காண்க.

3. 248 of 1923.

இப்பொழுது அளித்ததையும், சவர்ணன் அரையன் மதுராந்தகனும் அவருடைய சந்ததியாரும் அநுபவிக்க லாம் என்றும், அவ்வைத்தியர் மருகல் என்னும் ஊரினர் என்றும், பழையாற்றில் தன் அரண்மனையில் இருந்து இவ்வுத்தரவுகளை இவ்வம்மையார் அளித்தனர் என்றும், இவற்றைப் பேரவையினர் கல்லில் வெட்டினார்கள் என்றும் இன்னொரு கல்லெழுத்து அறிவிக்கிறது.[4]

திருவாவடுதுறையில்

இராசேந்திரசிங்க வளநாட்டு இன்னம்பர் நாட்டுப் பழையவானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் (முதலாம் இராசேந்திரனின் 4ஆம் ஆட்சியாண்டில்) 120 காசு பெற்றுக் கொஞ்சம் நிலமும் மனைகளும் ஆழ்வார் ஸ்ரீ பராந்தகன் குந்தவைப் பிராட்டியார்க்கு விற்றனர். அந்நிலங்களை அவ்வம்மையார், "சவர்ணன் அரையன் சந்திரசேகரன் ஆன உத்தம சோழ அசலன்" என்பானும் அவன் வழியினரும் அவ்வூர் வைத்தியராக இருந்து பணியாற்றும் பொருட்டு அவ்வைத்தியருக்கு அளித்தார்.[5]

விக்கிரம சோழனின் 3ஆம் ஆட்சிக்கு (கி. பி. 1121) உரிய கல்லெழுத்தினின்று திருவாவடுதுறையில் ஒரு வைத்தியக் கல்லூரி யிருந்ததாக அறிகிறோம்.[6] சங்கர தேவன் அறச்சாலை என்று ஒரு உணவுச் சாலை

4. 249 of 1923 (முதலாம் இராசேந்திரனின் 7-ம் ஆட்சி ஆண்டு).

5. 112 of 1925.

6. 159 of 1925.

இருந்தது. அதில் உணவு அளிக்கப் பெற்றவர்களில் வைத்தியக் கல்லூரி மாணவர்களும் ஆவர். [7] முந்நூற்று அறுபத்து நால்வன் அறச்சாலையிலும் மருத்துவ நூல் படிப்பவர்களுக்கும் இலக்கணம் படிப்பவர்களுக்கும் உணவு அளிக்கப்பெற்றது. [8]

### திருவிசலூரில்

குந்தவையார் சல்லியக்கிரியை போகமாகத் திருவிச லூரில் நிலதானம் செய்த செய்தியை முதலாம் இராசேந்திரனின் 4ஆம் ஆட்சி யாண்டுக் கல்லெழுத்துக் கூறுகிறது. [9]

### திருமுக்கூடலில்

"செங்கற்பட்டு ஜில்லாவில் காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் இருந்து வீரராசேந்திரன் காலத்துச் சாஸனம் ஒன்று கிடைத்திருக்கிறது. [10] கி. பி. 1067ஆம் ஆண்டுக்குரிய அக் கல்வெட்டு அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் திருமால் திருக்கோயிலுக்கு ஆண்டு தோறும் ஆகும் செலவுகளையும் அவற்றை நடத்துவதற்காகக் கிடைக்கும் வருமானங்களையும் விவரித்துக் கூறுகிறது. வீரசோழன் என்ற பெயரால் ஆதுலர்சாலையும் மருத்துவம் கற்பிக்கும் கலாசாலையும் கோயிலால் நிர்வகிக்கப்பெற்று வந்த

---

7. K. A. N. COLAS Part II Page 469.

8. மூன்றும் திருமுறை - தருமபுர ஆதீன வெளியீடு - கல்வெட்டு வரலாறு : பக்கம் 11.

9. 350 of 1907.

10. 182 of 1915. E. I. Vol XXI.

செய்தி அதிலிருந்து தெரியவருகிறது." [11] அவ்வாதுலர் சாலையில் ஓராண்டுக்கு வேண்டிய மருந்து வகைகள் இருந்தன என்றும், ஒரு மருத்துவனும் சல்லியக்கிரியை பண்ணுவான் என்பானும் பரம்பரையுரிமையுடையோராய் மருத்துவம் செய்தனர் என்றும், நோயாளிகளுக்குத் துணையாக மருத்துவப் பணிமகளிர் பலர் இருந்தனர் என்றும் அறிகின்றோம். இங்கிருந்த மருத்துவற்குக் கோதண்டராமன் அஸ்வத்தாம பட்டன் என்று பெயர்; இவனும் ஒரு சவர்ணன் ஆவன்.

## திருப்புகலூரில்

தேவூருடையான் வேளான் மனதுக்கினியான் ஆன விராட ராசன் என்பான் திருப்புகலூரில் முடிகொண்ட சோழப் பேராற்றின் வடகரையில் ஆதுலர்க்கும் அனாதர்க்கும் வைத்தியஞ் செய்யவும் உணவு அளிக்கவும் ஒரு ஆதுலர்சாலையும் மடமும் ஏற்படுத்தினான். க்ஷத்திரிய சிகாமணிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார், நரலோக வீரன் திருமண்டபத்தில் கூடியிருந்து கோயில் பண்டாரத்திலிருந்து தொகைபெற்று, நிலத்தை ஆதுலர் சாலைப்புற இறையிலியாக விற்றனர். இதனை விக்கிரம சோழனின் 2ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து அறிவிக்கிறது.[12]

## கோவந்தபுத்தூரில்

திருச்சி ஜில்லா கோவந்தபுத்தூரில் மூன்றும் இராசேந்திர சோழனது 2ஆம் ஆட்சியாண்டு (கி. பி.

11. Page 310 of S. I. T. I. Vol III, Part II.
12. 97 of 1928.

1248) க்குரிய கல்லெழுத்து ஒன்று [13] திருத்தொண்டத் தொகையான் திருமடம் என்று ஒரு மடத்தைக் குறித்துச் சில செய்திகளைக் கூறுகின்றது. சிதம்பரத்தவராகிய சுப்பிரமணிய சிவம் என்பார் 'கண்டா பரணர்' என்ற ஒருவருடைய பெயரர். இவர் சில நிலங்களை விலைக்கு வாங்கித் திருத்தொண்டத் தொகையான் திருமடத்துக்கு அளித்தார். இத்திருமடம் கோவந்தபுத்தூரில் திருவிசய மங்கை என்ற திருக்கோயிலில் திருமடை விளாகத்தில் இருந்தது. இங்ஙனம் அளிக்கப்பெற்ற நிலவருமானம் இத்திருமடத்துக்கு வரும் யாத்திரிகர்களுக்கு உப்பும் ஆமணக்கெண்ணெயும் கொடுக்கவும், ஸ்தானத்தார் நோய்வாய்ப்படின் அவர்களுக்கு வைத்திய உதவி செய்யவும் பயன்படுத்தப் பெற்றது.[14]

குன்றத்தூரில்

மூன்றும் இராசராச சோழன் காலத்தில் குன்றத்தூர் நாடு முழுதும் வைத்தியம் செய்தவர் மங்களாதி ராசன் சீராளன் எனப் பெற்றார்.[15] இவரும் ஒரு சவர்ணன் ; இவர் காஞ்சய கோத்திரத்தவர்; இவர் கடக மெடுத்த கூத்தப்பிரான், சிவகீர்த்தி, சைவ சிகாமணி என்ற சிறப்புப் பெயர்களைக் கொண்டவர். இவ்வடை மொழிகளால் இவர் சமய அறிவு படைத்தவர் என்றும் அறியலாம். இவருக்கு வைத்தியக்காணி அளிக்கப் பெற்றது.

13. 192 of 1929.

14. பிற செய்திகளை இந்நூலாசிரியர் வெளியிட்ட 'இலக்கியக்கேணி'யில் காண்க.

15. 784 of 1929—30; மூன்றும் ராசராசனின் 7 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்லெழுத்து.

**சுகடூரில்**

மைசூரைச் சேர்ந்த சுகடூரில் விக்கிரம சோழனது 2ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துளது.[16] இதில் உதய மார்த்தாண்ட பிரமாராயன் என்று ஒருவர் பேசப் பெறுகிறார். இவர் சகரயாண்டு 1042 இல் சோமேசுவரர் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்து நிலதானம் செய்துள்ளார். இவருடைய சிறப்புக்களில் ஒன்று ஆதுலர் சாலை ஏற்படுத்தியமையாகும்.[17]

## தொகுப்புரை

இதுகாறும் கூறியவாற்றான் நம் முன்னோர் மருத்துவ அறிவு பெருகப் பெற்றிருந்தனர் எனவும், ஆதுலர் சாலைகள் பலவிடங்களில் இருந்தன எனவும், சிறந்த மருத்துவர்கள் வைத்தியம் செய்தனர் எனவும், கோயில் களில் ஆதுலர் சாலைகள் நட்டத்தப் பெற்றன எனவும், வைத்திய போகங்களை வழிவழி அநுபவித்து வைத்தியர்கள் இலவசமாக வைத்தியம் செய்தனர் எனவும், சல்லி யக்கிரியை செய்வானும் (Surgeon) உண்டு எனவும், வைத்தியக் கல்லூரிகள் இருந்தன எனவும், பெருந்தனக் காரரும் ஒரோ வழி ஆதுலர்சாலைகள் ஏற்படுத்தினர் எனவும் அறியப்பெறும்.

---

16 175 of 1911.

17 பெருந்தொகை செ-1122.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

# குகைகள் *

## எடுப்பு

பிங்கலந்தை என்னும் நிகண்டில் குகை என்பது முனிவர் இருப்பிடம் என்று கூறப்பெற்றுள்ளது. "பிராமணரல்லாத சைவத்துறவிகள் வாழ்ந்த மடங்கள் குகை எனப்பெறும்" என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.[1] இச்சைவத் துறவிகள் விரதம் சீலம் ஞானம் ஆகியவற்றுள் சிறந்திருந்தனர்; நாட்டில் செல்வாக்குப் பெற்று மிக்க மேம்பாடுற்றிருந்தனர். இத்தகைய சீலர் வாழ்ந்த குகைகள் குறித்து ஈண்டுக்காண்பாம்.

## திருஞானசம்பந்தன் குகை

திருப்புத்தூர்த்தாலுகா சதுர்வேதிமங்கலம் என்ற ஊரில் மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் திருஞானசம்பந்தன் குகை என்று ஒரு குகை உருத்திர கோடீசுவரமுடைய நாயனார் திருக்கோயில் தப்பிலா வாசகன் திருமடை விளாகத்தில் இருந்தது. உய்ய நின்றாடுவான் கண்டன் ஆன ஈசான தேவன் என்பவரால் இது கட்டப்பெற்றது. இக்குகையில் ஆண்டார்களுக்கு[2] அன்னம் பாலிக்கப் பொன்னமராவதியைச்

---

* குமரகுருபரனில் வெளி வந்தது.

1. சாஸனத் தமிழ்க்கவிசரிதம், பக்கம் 180, அடிக் குறிப்பு.

2. *ஆண்டார்கள்- "அடியார்கள்; பக்தர்கள்"* S. I. T. I. Pt III, P. 1397.

சேர்ந்த திருக்கொடுங்குன்றம் உடையான் கேரள ராசன் ஆன வீரமழகிய நிஷதராசன் என்பார் நில மளித்தார். இச்செய்திகள் மூன்றும் குலோத்துங்க சோழனின் 21 ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து உரைக்கின்றது.[3]

கும்பகோணம் தாலுகா முன்னியூரிலும் திருவகத் தீசுவர முடையார் கோயில் தெற்கில் திருமடைவிளாகத் தில் திருஞானசம்பந்தன் குகை இருந்தது. புத்தூர் ஆன திருபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலத்துப் பெருங் குறி மகாசபையார், இக்குகைக்குப் பூண்டியுடையான் உதையஞ் செய்தான் அளித்த நிலத்தை ஊர்க்கீழ் இறையிலியாக்கிய செய்தி மூன்றும் இராசராசனது 22ஆம் (கி. பி. 1200) ஆட்சியாண்டுக் கல்லெழுத்து அறிவிக்கிறது.[4]

### திருநாவுக்கரசு குகை

திருக்குறுக்கையில் உள்ள மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 29ஆம் ஆட்சியாண்டு (1201க்குரிய) கல் லெழுத்து[5] திருநாவுக்கரசு குகை என்று ஒரு குகை யைப் பற்றிக் கூறுகிறது. இக்குகை கட்டுவதற்கும், இக்குகைக்கு வரும் அபூர்விகளுக்கும்[6], திருவைகாசித்

---

3. 311 of 1928.
4. 609 of 1902.
5. 219 of 1917.
6. அபூர்விகள் "வேதம்வல்லவர்; பெரும்பாலும் தலயாத்திரை செய்யும் பிராமணரைக் குறிக்கும்"- S. I. T. I. Pt III, P. 1393.

திருநாளுக்கு வரும் மகேசுவரர்களுக்கும் உணவு அளிக்கவும், நெல் தானம் செய்யப்பெற்றது. திருத்தாண்டகம் ஓதுவது [7] குறித்தும் இக்கல்லெழுத்து அறிவிக்கிறது.

## ஆலால சுந்தரன் குகை

மிழலை நாட்டுத் தலைவர் ஆகிய புலியூருடையான் ஆதித்ததேவன் என்பவருடைய மகளும், கண்ணமங்கல முடையான் வீமப்பிள்ளை என்பவருடைய மனைவியுமாகிய ஒருவர், திருமணச் சேரித் திருக்கோயிலில் அம்மன் திருக்கோயிலைக் கட்டுவதற்கும், பூண்டி என்னும் ஊரினராய புகலி வேந்தர் என்பார் தங்குவதற்கு ஆலால சுந்தரன் குகை என்று ஒரு குகை கட்டுவதற்கு மாக நன்கொடை வசூலித்தமை குறித்து மூன்றும் இராச ராசனின் ஆருவதின் எதிராமாண்டு (1222க்குரிய) கல்லெழுத்துக் கூறுகின்றது. [8]

## திருத்தொண்டத்தொகையான் குகை

மூன்றும் இராசேந்திர சோழனுடைய 4ஆவது ஆட்சி ஆண்டு (1250க்குரிய) திருவிடைவாயில் கல்லெழுத்தினின்று "திருத் தொண்டத் தொகையான் குகை" என்று ஒரு குகை திருவிடைவாய் என்னும் தலத்தில்

---

7. திருத்தாண்டகம் போலத் திருவெம்பாவை, திருச்சாழல் ஆகியவை மட்டும் ஓதுவதற்கு நிபந்தங்கள் அளிக்கப்பெற்றமையைச் சாஸனங்கள் கூறுகின்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள் திருவெம்பாவை, திருச்சாழல் ஆங்கில மொழி பெயர்ப்பு - முன்னுரைகளைக் காண்க. இந்நூல் 'திருவெம்பாவை' என்ற கட்டுரையும் காண்க.

8. 28 of 1914.

இருந்ததாக அறிகிறோம். திருப்பள்ளியறையைப் பார்வை யிடுபவருக்காகவும், திருப்பதியம் விண்ணப்பம் செய் வார்க்குமாகவும் நிலம் விடப்பெற்றதாக இக்கல்லெழுத்துப் பகர்கின்றது. இப்பள்ளியறையில் திருத்தொண்டத் தொகையான் குகை இருந்தது. இக்குகையுள் திரு முறைகள் வைக்கப்பட்டிருந்தன. திருக்கழுமலத்தில் திருத்தோணிபுரமுடைய நாயனர் கோயிலில் திருமுறைத் தேவாரச் செல்வன் குகை என்ற ஒரு குகை இருந்தது. அதில் முதலியார் திருவையாறுடையார் என்பவர் வழி யினர் இருந்தார். அவரை வழிபடும் ஒருவரே இக் கல்லெழுத்தில் கண்ட தருமத்தைச் செய்தவர் ஆவர் என்றும், ஆனமங்கல முடையான் அரையன் வடுக நாதன் ஆன சென்னவரையர் என்பவர் வாணு தரயர் பொருட்டு இத்திருத்தொண்டத் தொகையான் குகையை ஏற்படுத்திஞர் எனவும் இக்கல்லெழுத்து நுவல்கிறது.[9]

## திருமுறைத் தேவாரச் செல்வன் குகை

மேற்குறித்த திருவிடைவாய்க் கல்லெழுத்தில் கண்ட திருத்தோணிபுரத்துத் திருமுறைத் தேவாரச் செல்வன் குகை, முன்னியூரில் உள்ள மூன்றும் இராசராச சோழனது இருபத்தேழாவதின் எதிராமாண்டு (1244க் குரிய) கல்லெழுத்திலும் குறிக்கப்பெற்றுள்ளது.[10] இக் கல்லெழுத்தினின்று இக்குகை, மடம் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது என்றும், இக்குகை திருக்கழுமலத்து உடை

9. 28 of 1914; திருத்தொண்டத் தொகை இன்னும் பல்வேறு முறைகளில் போற்றப்பெற்றமை குறித்து யான் எழுதிய 'இலக்கியக் கேணி'யில் காண்க.

10. 608 of 1902; S. I. I. Vol. VIII 205.

யார் திருத்தோணீசுவரமுடையார் திருக்கோயிலில் வடக்கில் திருமடை விளாகத்து இருந்தது என்றும், நரசிம்மதேவர் சந்தானத்துபிள்ளைகள் இதன் தலைமை தாங்கி எழுந்தருளியிருப்பர் என்றும், இக்குகைக்குத் திருவகத்தீசுவரமுடையார் நத்தப்பகுதியைக் கொடுத்துப் பரிவர்த்தனையாக 22 குழி மனை பற்றினர் என்றும் அறியப் பெறுகின்றன.

## காழிக்கற்பகம் குகை

ஷ முன்னியூர்க்கல்லெழுத்தில் [11] காழிக்கற்பகம் குகை [12] என்று ஒரு குகை பேசப்பெறுகின்றது. இது ஷ திருமுறைத் தேவாரச் செல்வன் திருமடத்துத் தலைவரால் நிறுவப்பெற்றது. " இக்குகையில் கட்டி மேய்ந்து திருமுற்றத் திருக்காப்பு நீக்கி இருப்பார்க்கும் திருவிளக்கெண்ணை உள்ளிட்ட அழிவுகளுக்கும்,"[13] முன்னியூர்

---

11. 608 of 1902 ; S.I.I. Vol. VIII 205.

12. "கண்புனல் விளைவயல் காழிக் கற்பகம்
நண்புணர் அருமறை ஞான சம்பந்தன் "
*(3 ஆம் திருமுறை - திருப்பைஞ்ஞீலி). முதல் இராசராசனின் 27 ஆம் ஆட்சியாண்டுக்குரிய அல்லூர்க் கல்லெழுத்*தில் 'திருவெண்ணுவல் பூந்தோட்டத்தில் பெருந்திருவமிர்து செய்தருள வசக்கின நிலன் ஸ்ரீ யாழிக்கற்பகம் அரைமா' என்ற பகுதியில் இத் தொடர் ஒரு நிலத்தின் பெயராக அமைந்தமை அறிக.

13. இக்குகையைப் பாதுகாத்துக் கதவு திறந்து வைத்துக் கொண்டு விளக்கு ஏற்றிவைப்பவர்க்கு - என்பது இதன் பொருள் போலும்.

ஊரவர் காணியும் இறையிலியுமாக 350 குழிநிலம் அளித்தார்கள். "உடையார் திருவையாறுடைய சந்தானத்துக் கடவார் நிச்சயித்துக் குகையிலிருப்பார்" என்ற வாசகம் இக்குகையில் இருக்க வேண்டியவர் யார் என்பதைக் கூறுகிறது.

## திருப்புகலூரில்

சேரமான் தோழர் என்ற ஒருதவசி இருந்தார். அரசனது ஆயுஷ்யார்த்தமாக, இத்தவசி வேண்டிக் கொண்ட வண்ணம், திருப்புகலூரில் ஒரு குகை கட்டப் பெற்றது. அதில் வழிபாடு நடத்த ஏற்பாடு செய்தனர் என்றும், அது திருப்புகலூருடையார் கோயிலின் வட கிழக்கு மூலையில் நிறுவப் பெற்றது என்றும் இரண்டாம் இராசராசனது 3 ஆம் ஆட்சி ஆண்டு (1219 க்குரிய) கல்லெழுத்து உரைக்கின்றது.[14]

## பொலிசாத்தழகியான் குகை

கோயில் திருமாளம் என்பது சோணாட்டுச் சிவஸ் தலங்களுள் ஒன்று. இவ்வூரில் பொலிசாத்தழகியான் குகை என்று ஒரு குகை இருந்தது. குகை நடத்துவதற் குரிய செலவுகளுக்காகத் திருமாகாளமுடையார் தேவ தான நிலங்கள் வாங்கப் பெற்றன. பிள்ளைகாலிங்க ராயர் என்பவர் அந்நிலங்களினின்று பெறக்கூடிய வரிகளையெல்லாம் இக்குகைக்கு அளித்தார். இச்செய் தியை மூன்றும் இராசராசசோழனது 4 ஆம் ஆட்சி ஆண்டு (1219க்குரிய) கல்லெழுத்தில் காணலாம்.[15]

14. 87 of 1928.
15. 241 of 1917.

## திருத்தருப்பூண்டியில் குகை

திருச்சிற்றம்பல முடையார் என்று ஒரு சைவத் துறவி திருத்தருப்பூண்டிக்கு வந்தார். அவரை அவ் வூரிலேயே தங்கியிருக்குமாறு திருத்தருப்பூண்டிப் பெரு மக்கள் வேண்டிக் கொண்டு, ஒரு குகை கட்டிக் கொடுத்ததோடு, தேசாந்திரிகளுக்கு உணவு அளிக்க நிலமும் அளித்திருந்தனர். மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 22ஆம் ஆட்சியாண்டில் (1200 ல்) குகை யிடிகலகம் ஒன்று நடந்தது; இத்திருத்தருப்பூண்டிக் குகையும் அழிக்கப்பெற்றது ; எனினும் இரண்டாண்டு களுக்குப் பிறகுதான் ஷெ சைவத்துறவி இறையடி அடைந்தார் ; ஹ்ருதயதேவர் என்பார் அக்குகைக்குத் தலைவர் ஆனார்.

## குகையிடிகலகம்

ஷெ திருத்தருப்பூண்டிக்குகை குறித்தும், குகையிடி கலகம் குறித்தும் மூன்றும் இராசராசனது இரண்டாம் ஆட்சியாண்டு (1218க்குரிய) கல்லெழுத்துக் கூறுகிறது[16] மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 22ஆம் ஆட்சி யாண்டில் குகையிடிகலகம் நடந்தது ; அந்நாட்களில் சைவத்துறவிகளின் மடங்களாகிய பல குகைகள் அழிக்கப்பெற்றன ; அங்ஙனம் அழிக்கப்பெற்றவற்றுள் திருத்தருப்பூண்டிக்குகையும் ஒன்று. '' இக்குகையிடி கலகம் சோழ மன்னர்களுக்குக் குருமார்களாக நிலவியவர் களும், கோளகி மடம், பிட்சாவிருத்திமடம் முதலான சைவாதீனங்கட்குத் தலைவர்களாயிருந்தவர்களும் ஆகிய

---

16. 471 of 1912 ; ARE 1913, II, 42.

வடநாட்டுப் பிராமணர்கள் விரதம் சீலம் ஞானம் ஆகிய வற்றில் சிறந்த தென்னாட்டுச் சைவத் துறவிகளின் செல் வாக்கையும் மேம்பாட்டையும் குறைப்பதற்கு உண்டு பண்ணியது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். எனினும் மூன்றும் குலோத்துங்கனுக்குப் பிறகு பட்டம் பெற்ற மூன்றும் இராசராசன் ஆட்சியில் சைவத்துறவி களின் குகைகள் மறுபடியும் சிறந்து விளங்கின என்பது கல்வெட்டுக்களால் வெளியாகின்றது.''[17]

சிலபெரியோர்கள்

குகை ஈசுவர சுவாமிகள்: ராசிபுரம் தாலுகா அநந்த கவுண்டன் பாளையத்தில் மின்னக்கல் என்ற ஒரு பாறை யிலுள்ள கல்லெழுத்து[18] குகை ஈசுவரசுவாமியார் என்ற ஒருவர்க்கு "நரலோகர்கண்டவங்கி நாரணன் சின்ன நாயக்க நராயன்" என்பார் வெண்ணந்தூர் என்ற ஊரில் அன்னம் பாலிப்புத் தருமம்" நடத்த நிலம் அளித்த செய்தியை விவரிக்கின்றது.

கலி 4624 க்குரிய ஒரு செப்பேட்டில்[19] இதுவே பெயருடைய இன்னொருவர் கூறப்பெறுகிறார். கொங்கு நாட்டு அளயாகிரி என்ற ஊரில் ஒரு மடத்தில் அன்னம் பாலிப்பு நடத்துவதற்காகவும், வழிபாடாற்றவும், கொங்கு

---

17. திரு. பண்டாரத்தார்-சோழர்வரலாறு-பகுதி II, பக்கம் 171.

18. 509 of 1929-30.

19. C.P.I. of 1930-31. (இது பிற்காலத்திய செப் பேடாதல் கூடும்.)

நாட்டுச் சில நாடுகளில் சமய முதலிகள் சில வரிகளை வசூலித்துத்தர ஏற்பாடு செய்த விவரம் இச்செப்பேட்டில் கூறப்பெற்றுள்ளது.

குகைநமச்சிவாயர் : இவர் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சைவத்துறவி ; "திருவண்ணாமலையில் ஒரு குகையில் யோகிருந்தமையால் குகை என்னும் அடைமொழி கொடுத்து வழங்கப் பெற்றார். இவர் தவம் புரிந்த குகையை இன்னும் அடையாளம் காட்டுவர் அந்நகர மக்கள்."[20] இவர் இயற்றிய நூல் அருணகிரியந்தாதி. இவர் மாணவர் குருநமச்சிவாயர்.

குகை மடம்

சிதம்பரத்தில் "கண்கட்டி மடம்" என்று ஒரு மடம் தெற்கு வீதியும் கீழை வீதியும் கூடுமிடத்தில் இருந்தது என்னக் கூறப்பெறுகிறது. இதில் சிவதருமோத்தரம் முதலிய நூல்களை இயற்றியவரான ஞானசம்பந்தர் என்பார் வாழ்ந்து வந்தார். இவர் உலகத்தவரைப் பாராது தமது இருகண்களையும் துணி கொண்டு இறுகக் கட்டிக் கொண்டு இருந்தமையின், இவர் வாழ்ந்த இடத்திற்குக் "கண்கட்டி மடம்" என்று பெயர் வழங்கி வந்தது. இம்மடத்திற்குக் "குகை மடம்" என்று பெயர் இருந்ததெனத் தெரிய வருகிறது.[21]

---

20. கலைக்களஞ்சியம் தொகுதி 3-பக்கம் 737.

21. திரு. S. சோமசுந்தர தேசிகர்—16ஆம் நூற்றாண்டுப் புலவர் வரலாறு, பக்கம் 72.

## தொகுப்புரை

சைவத்துறவிகள் வாழ்ந்த இடங்கள் "குகை" எனப் பெற்றன ; மூவர் பெயராலும் குகைகள் இருந்தன ; குகைகளில் வாழ்ந்த துறவிகள் உணவு அளித்தல் முதலிய அறங்களைச் செய்து வந்தனர் ; ஊர்ப் பொது மக்கள் அத்துறவிகளை நன்கு ஆதரித்தனர் ; ஒருகால் "குகையிடிகலகம்" நடந்தது ; அக்கலகத்துக்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லை ; ஆகலின் அக்கலகம் விரைவில் அடக்கப்பெற்றது ; குகைகளில் வாழ்ந்தவர்களுட் சிலர் 'குகை' என்ற சொல்லோடு இணைத்து வழங்கப்பெற்றனர் — என்றின்னோரன்ன செய்திகளை அறிகிறோம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

உ

திருச்சிற்றம்பலம்

# திருப்பதியம் விண்ணப்பித்தல்*

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் சுந்தரரும்" மன்பதைகள் உய்யும் வண்ணம் ஓதியருளிய திருநெறிய தமிழே திருப்பதியம் என்று கல்லெழுத்துக் களில் வழங்கப்பெறும். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும் நாவினுக்கரையரும் ஓதிய நற்றமிழ் மாலைகளை அவர் சொல்லியாங்குச் சொல்லி ஏத்தின் சிவபெருமான் உவந்தருளுவார் என்று சுந்தரர் பகர்ந்துள்ளார். நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறிய சிவபெருமான் இன்னிசைத் தீந்தமிழ்ப் பனுவல்களைப் பண்ணொன்றப் பாடின் பலவாற்றானும் பரிந்தருளுகிறார். இருந்து தமிழோடிசை கேட்கும் இச்சையால் நித்தல் அப்பருக்கும் சம்பந்தருக்கும் சிவபெருமான் திருவீழி மிழலையில் காசு நல்கியது இத்தமிழ்நாடு அறிந்ததே. இவற்றை நன்குணர்ந்து வழி வழிச் சிவம்பெருக்கிய சோழ மன்னர்கள் வானளாவிய சிவனுறை கோயில்களைக் கற்றளிகளாக அமைத்தும், இறைவன் திருமுன் பண் சுமந்த பாடலை விண்ணப்பிக்கச் செய்தும் விண்சுமந்த வியன்கீர்த்தி எய்தினர். இங்ஙனம் திருநெறிய தமிழைத் திருக்கோயில்களில் ஓதச் சோழமன்னர்களும் பிறரும் அளித்த நிபந்தங்கள் பல. அவற்றுள் கண்ட சில சிறப்புடைச் செய்திகளைச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

* திருக்கோயிலில் வெளி வந்தது.

### மிகப் பழைய நிபந்தம்

திருப்பதியம் விண்ணப்பம் செய்யக் கொடுக்கப் பெற்ற நிபந்தங்களுள் மிகப் பழமையானதாகக் கருதப் படுவது, மூன்றும் நந்தி வர்மன் என்ற பல்லவ அரசன் காலத்த தாகும். இவன் 825 முதல் 850 வரை ஆட்சி செய்தவன். "சிவனை முழுதும் மறவாத சிந்தையன்" என்று நந்திக்கலம்பகம் இவனைப் போற்றுகின்றது; "சிவனது திரு அடையாளம் (திருநீறு) நெற்றியிற் கொண்ட நந்திவர்மன்" என்று வேலூர்ப் பாளையப் பட்டயங்கள் பகர்கின்றன. இத்தகைய பல்லவ அரசன், தன் 17ஆவது ஆட்சியாண்டில், திருவல்லம் கோயிலுக்கு மூன்றூர்களை விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதி மங்கலம் என்று பெயரிட்டுத் தேவதானமாக விட்டான் S. I. I. Vol III பக்கம் 93). அவ்வூரினின்று ஆண்டு தோறும் 2000 காடி நெல்லும் 20 கழஞ்சு பொன்னும் வருமானம் வரும்; இவ்வருமானத்தில் திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவார் உள்ளிட்ட பலபணி செய்வார்க்கும் நானூற்றுக் காடி நெல் ஒதுக்கப் பெற்றது. (3 காடி—ஒரு கலம்.) எனவே சுந்தரர் காலத்தை யொட்டியே திருக்கோயில்களில் தேவாரம் ஓதுவதற்கு வழிவகை செய்தார்கள் என்று இதனால் அறியலாம்.

### அந்தணர் ஓதுதல்

திருத்தவத்துறை என்ற பாடல் பெற்ற தலம் இந் நாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி என்ற பெயரில் திகழ்கிறது. திருத்தவத்துறை மகாதேவர் திருமுன் நாடோறும் மூன்று சந்திகளிலும் இரண்டு பிராமணர் திருப்பதியம் விண்ணப்பம் செய்யச்

**சிவகோசரிபிடாரன் தேசவிடங்கன்** என்பார் நிலதானம் செய்தார் என்று முதற் பராந்தக சோழனுடைய 37 ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 943) க்குரிய கல்லெழுத்து நவில்கின்றது (99 of 1929). இந்நிவந்தம் போதாமை கண்டு 16 ஆண்டுகளுக்குப் பிறகு சுந்தரசோழனுடைய மூன்ருவது ஆட்சி யாண்டில் (கி. பி. 959 இல்) மேற் குறித்த சிவகோசரிபிடாரன் சிறிது நிலம் அளித்தான் என்றும், நிலத்தினின்று பெறும் எள்ளுக்கு உரிய எண்ணெயில் குடிவாரப் பகுதி கோயிலுக்குச் சேர வேண்டும்; நிலத்துக்குரிய செவ்வாரப் பகுதி திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் பெற வேண்டும் என்று ஏற்பாடு செய்தான் என்றும் இன் னொரு கல்லெழுத்துக் கூறுகின்றது (104 of 1929). இவற்ருல் அந்தணர் கோயிலில் திருப்பதியம் விண் ணப்பம் செய்து வந்தனர் என்பது தெள்ளிது. இத் தருமத்தைச் செய்தவர் பெயருள் கண்ட "சிவகோசரி" என்பது திருக்காளத்தியில் குடுமித் தேவரைப் பூசித்து வந்த சிவகோசரியாரை நினைப்பிக்கும். இதனுன் இச்சிவகோசரியாரும் முப்போதும் திருமேனி தீண்டும் சிவப்பிராமணர் ஆதல் கூடும்; பிடாரன் என்றமையின் இவரும் தேவாரம் ஓதுதலில் வல்லவர் ஆதல் கூடும் என்றும் ஊகித்தறியலாம்.

## சிவபூசகர் விண்ணப்பித்தல்

தஞ்சை இராசராசேச்சரத்தில் முதலாம் இராசராச னது 29 ஆம் ஆட்சியாண்டில் (அதாவது கி. பி. 1014 இல்) "உடையார் ஸ்ரீராஜராஜீச்சுவரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மர்"

என்று ஒரு கல்லெழுத்துப் புகல்கின்றது (S. I. I. Vol-II, Part III, No. 65). இந்நாற்பத்தெண்மரும் சிவதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்தவராதல் வேண்டும் என்பதை அவர்களது பெயர்களைக் கொண்டே அறியலாம். அப் பெயர்களுட் சில பின்வருமாறு :—

பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜ ராஜப் பிச்சனான சதாசிவன்; திருவெணாவல் செம்பொற்சோதி யான தக்ஷிணமேருவிடங்கப்பிச்சனான ஞானசிவன்; பட்டாலகன் சீருடைக்கழல் ஆன பூர்வசிவன்; ஐஞ்ஞூற்றுவன் வெண்காடன் ஆன சத்யசிவன்; அரையன் அணுக்கனான திருமறைக்காடன் ஆன தருமசிவன்; கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வசிவன்; ஐஞ்ஞூற்றுவன் திருவாய்மூரான அகோரசிவன்; ஐயாறன் பெண்ணொர்பாகனான ஹ்ருதய சிவன்.

இவர்கள் யாவரும் சிவதீக்ஷை பெற்றவர் என்பது சதாசிவன் ஞானசிவன் பூர்வசிவன் என்ற தீக்ஷா நாமங்களால் அறியப்பெறும். அன்றியும் அன்னோர் திருவாஞ்யம், திருவெணாவல் (திருவானைக்கா), திருவெண்காடு, திருமறைக்காடு, திருவாய்மூர், திருவையாறு முதலிய சிவதலங்களினின்றும் போந்தவர் என்பதையும் இப் பெயர்களால் அறியலாம். இப்பெயர்களுள் 'செம்பொற் சோதி' என்பது அப்பர் வாக்கு; 'சீருடைக்கழல்' என்பது திருவாசகம்; 'மழலைச்சிலம்பு' என்பது திருவிசைப்பா.

இனித் தேவாரம் ஓதுங்கால் உடுக்கையும் கொட்டி மத்தளமும் வாசித்தல் அக்கால வழக்கம் போலும். இவற்றை வாசித்தவர்களும் சிவதீக்ஷை பெற்றவராகத் திகழ்ந்தனர் என்பதற்கு அவர்கள் பெயர்களே சான்று

பகரும். உடுக்கை வாசித்தவன், 'தத்தயக் கிரமவித்தன் மகன் சூரியதேவக் கிரமவித்தனான ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரனான சோமசிவன்' என்பவன் ஆவன். கொட்டிமத்தளம் வாசித்தவன், 'குணப்புகழ் மருதனான சிகாசிவன்' என்ற பெயருடையவன். உடுக்கை வாசித்தவன் ஒரு கிரமவித்தன் எனப் பெறுகிறான்; வேதம் ஓதும் முறைகளில் கிரமம் என்பது ஒன்று; ஆகவே இவன் வேதம் ஓதும் அந்தணன், தீக்ஷை பெற்றவன் என்று அறியப் பெறும்.

## குருடர்கள் பாடியமை

திருவாமாத்தூர், நடு நாட்டுத்தலங்களுள் ஒன்று. 1133 முதல் 1150 வரை ஆண்ட இரண்டாம் குலோத்துங்க சோழனது இரண்டாவது ஆட்சியாண்டில், திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய தேவர் கோயிலில், மூன்று சந்தியும், திருப்பதியத்தைப் பாடி வந்தவர் பதினறு குருடர்கள் என்றும், அவர்களுக்குக் கண் காட்டுவார் இருவர் என்றும், இவர்களுக்குப் பன்னிரு வேலி நிலம் திருப்பதியக்காணியாகக் கொடுக்கப் பெற்றிருந்தது என்றும் ஒரு சாசனத்தில் (749 of S. I. I. Vol VIII; A. R. No. 433 of 1903) கண்டிருக்கிறது.

## அடிகள்மார் பாடுதல்

பண்டைக் காலத்தில் கோயில்களில் இசையும் நடனமும் வல்ல பெண்மகளிர் பலர் இருந்தனர். அவர்கள் இசையும் நடனமும் வளர்த்தார்கள். அன்னோர் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையார் என்ற பெயரால் குறிக்கப் பெற்றனர். இத்தகைய அடிகள்மார் மூவர், அள்ளூர்ப் பசுபதீசுவரர் கோயிலில், திருப்பதியம்

பாடிவந்தனர் என்று கோப்பரகேசரிபன்மரது 4 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்லெழுத்து(687 of S. I. I. Vol. VIII; No 373 A of 1903) குறிப்பிடுகின்றது.

திருவிளாங்குடியில் இடிந்து கிடக்கும் சிவன் கோயிலிற் கண்ட முதலாம் இராசராச சோழனது 28ஆம் ஆட்சி யாண்டுச் சாஸனம் (புதுக்கோட்டைச் சாஸனங்கள், எண் 90) சில அரிய செய்திகளைக் கூறுகிறது. நூற்று வேலி என்று பேர் கூவப்படும் குடிக்காடு, குளம் உடைகுளமாய்க் காடெழுந்து கிடந்தது; காட்டை வெட்டிக் குளம் கல்லி முன் பெயர் தவிர்த்துச் சேனபதி உத்தம சோழ நல்லூருடையான் பாளூர் அம்பலத்தாடியான முடிகொண்ட சோழ விழுப்பரையர் தாயார் பாசூர் நங்கையார் பேரால் பாசூர் நங்கை நல்லூர் என்று புதுப் பெயர் கொடுத்தனர், அவ்வூர்ப் பெருங்குறி மகாசபையார். இந்நிலத்தின் வருவாய், சித்திரைத் திருநாள் திருவாதிரைத் திருநாள் ஏழு நாட்களுக்கு வேண்டும் அழிவுகளுக்குப் பயன்படுத்துவதோடு, இத்தேவர்க்கு முன் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் அடிகள்மார்க்கு நிவந்தம் இல்லாமையால் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் நான்கு பேருக்கு ஊதியம் அளிக்கவும் இடம் தரப் பெற்றது.

தேவரடியார் நடித்துப் பாடுதல்

1063 முதல் 1070 வரை ஆட்சி செய்த வீரராஜேந்திர சோழனது திருவொற்றியூர்க் கல்வெட்டொன்று, மணலி என்னும் ஊரிலிருந்த 60 வேலிநிலத்தை வீரராசேந்திர விளாகம் என்று பெயரிட்டு அரசனின் ஆயுஷ்யார்த்தமாகவும், அரசியாரது மாங்கல்யத்தைக்

காத்தற் பொருட்டும், அவருடைய குழந்தைகளின் நலன் பொருட்டும் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் தருமங்கள் செய்ய வழிவகை செய்ததை உணர்த்துகிறது. திருப்பள்ளியெழுச்சிக்காகவும், திருவாதிரைத் திருநாளில் திருவெம்பாவை விண்ணப்பிப்பதற்காகவும், நடித்தும் பாடியும் தொண்டு செய்துவந்த 22 தளியிலார்க்கும், ஒரு ஆடலாசானுக்கும், அகமார்க்கத்தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்யும் 16 தேவரடியார்களுக்கும் ஊதியம் அளித்தற் பொருட்டு இந்நில வருமானம் ஒதுக்கப் பெற்றது. எனவே தேவரடியார்கள் திருப்பதியம் விண்ணப்பம் செய்தனர்—அதுவும் அகமார்க்கத்தில் நிகழ்த்தப் பெற்றது—அதாவது தேவாரங்களைப் பாடும் பொழுது சுவை பொருந்தச் சத்துவம் தோன்ற அபிநயத்தோடு பாடினர் என்று இக்கல்லெழுத்தினின்று அறியலாம்.

திருப்பாட்டு

விசயநகர அரசர்களுள் ஒருவர் சாளுவ இம்மடி நரசிம்மன் என்பார். அக்காலத்தில் துளுவ சேனபதி நரசா நாயக்கரென்றொருவர் இருந்தார். இந் நரசா நாயக்கரது பணியாள் ஈசுவர நாயகர் என்ற பெயருடையவர். இவர் (வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள) தேவிகா புரத்தில் திருமலாவுடைய நாயனுர் திருமுன் திருப்பாட்டு ஓதுவதற்கு நிபந்தம் அளித்ததாகத் தேவிகாபுரத்துக் கல்வெட்டொன்றில் (355 of 1912) காணலாம். இக்கல்வெட்டு சகரயாண்டு 1422-க் குரியது.

"சோழ வளநாட்டு நடுவு மண்டலத்துப் பெரும் பற்றப் புலியூர் நயினுர் திருவம்பல முடைய நயினுர் திருப்பூ மண்டபத்தாரில் திருவண்ணுமலைப் புலவர்

சிதம்பர நாதன் திருமூலநாத முதலிக்குப் பண்டுடை மனையும் பழம் பேரையும் தவிர்த்துத் திருப்பாட்டுக் காணி யாட்சையாகக் கற்பிக்கும் படிக்கு நம் குமாரன் அழகக சொக்கனார் அபிராம பாண்டியன்......ஓலையும் விடுகையில்'' என்பது அதிவீர ராம பாண்டியரின் சாஸனப்பகுதி. இவர் சகம் 1486 (கி. பி. 1564) இல் பட்டம் எய்தியவர். இவர் மகன் அழகக சொக்கனார் அபிராம பாண்டியன் என்பார் திருவண்ணாமலைப் புலவர் சிதம்பரநாதனுக்குத் திருப்பாட்டுக்காணி யாட்சி யளித் தனர் என்பதே அச்சாஸனத்தில் (T. A. S .Vol I பக்கம் 279-80) கண்ட செய்தியாகும்.

'பாவெனப் படுவதுன் பாட்டு, பூவெனப் படுவது பொறி வாழ்பூவே' என்று துறைமங்கலம் சிவப்பிரகாசர், திருவாசகத்தையே பாட்டு என்று கூறியிருப்பினும், சுந்தரர் தேவாரத்தைத் திருப்பாட்டு என்று கூறும் மரபும் உண்டு, எனினும் "இங்குத் 'திருப்பாட்டு' என்பது பொதுவாகத் தேவாரத் திருமுறைகளையே குறித்ததாதல் வேண்டும்.

## பெரிய திருப்பாட்டு

விசயநகரப் பேரரசர்களுள் சிறந்தவர் கிருஷ்ண தேவராயர். இவர் சகம் 1438 இல் காளத்திக்கு எழுந் தருளிக் காளத்திநாதனைச் சேவித்து நூற்றுக்கான் மண்டப மும் பெரிய கோபுரமும் கட்டுவித்துத் திருவண்ணாமலைக்கு வந்து பல சிவத் தொண்டுகளைச் செய்தார் என்று திருவண்ணாமலைக் கல்லெழுத்தொன்று (165 of S. I. I. Vol VIII ; No. 574 of 1902) நுவல்கிறது. அக் கல் லெழுத்தில் "பெரிய திருப்பாட்டு ஓதுவார் பேர் 2"

என்றுள்ளது. சிவன்கோயிலில் ஓதப் பெறும் பெரிய திருப் பாட்டு என்பது தேவாரத்திருமுறைகளைத் தவிர்த்து வேறு யாதாயிருத்தல் தகும் ?

## திருஞானம் ஓதுதல்

திருநெல்வேலி மாவட்டம் திருவாலீசுவரம் என்ற தலத்திலுள்ள சிவாலயத் திருமதில்களில் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியனது 3 ஆம் ஆட்சி யாண்டில் அமைந்த சாஸனம் ஒன்றில் (359 of 1916), "திருஞானம் விண்ணப்பம் செய்வதற்குச் சிவப் பிராமணர் எண்மர் கோளகி மடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தைச் சார்ந்த புகலிப்பெருமாள் என்பாருடன் உடன்படிக்கையின் பேரில் நிலம் விற்றனர்'' என்று வரையப் பெற்றுள்ளது. இதனால் சிவப்பிராமணர் திருஞானம் விண்ணப்பித்தனர் என்று அறியலாம்.

திருநெல்வேலித் திருக்கோயிலில் திரு ஞானம் ஓத விக்கிரம சோழ தேவர் கண்ட தவசிகளில் பதினொரு பேர்க்கும், இவர்கள் வர்க்கத்தில் திருஞானம் ஓதும் பேர்க்கும், பதினொரு மனைகள் யாண்டு 15ஆவது முதல் மடம் எடுத்திருக்கக் காணியாகத் தரப்பெற்றன என்று ஒரு கல்வெட்டு (420 of S. I. I. Vol. V ; 131 of 1894) விவரிக்கின்றது. இனி, போஜனம் உள்ளிட்டு வேண்டு வன வற்றுக்கு நிலம் ஒரு வேலியும் எட்டுமா கோமாற பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவரது ஆட்சி யாண்டு பதினைந்தாவது முதல் திருஞானப்புற இறையிலியாகத் தரப்பெற்றது என்று இன்னொரு சிலைமேல் எழுத்து (421 of S. I. I. Vol. V ; 132 of 1894) செப்புகின்றது.

திருச்செந்தூர்த் தாலூகா ஆற்றூர்க் கல்வெட்டில் (463 of 1929-30) திருஞானம் ஓதுவதற்குத் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் காலத்தில் நிபந்தம் கொடுக்கப் பெற்றது என்று படிக்கிறோம். இக் கல்வெட்டுக்குரிய அரசன் 1239 இல் பட்டம் பெற்ற மாறவர்மன் சுந்தரபாண்டியன் II என்றும், விக்கிரம சோழதேவர் என்பார் கொங்குச்சோழர் என்றும், இச் சுந்தரபாண்டியர்க்கு மச்சுனனூர் என்றும் ஆராய்ச்சி யாளர் கூறுவர் (Page 77 of A. R. E. for 1929-30).

திருஞானம் என்பது தேவாரம் போலச் சமயகுர வருள் ஒருவரால் அருளப்பெற்ற பக்திநூலாக இருத்தல் கூடும் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர் (Page 77 of A. R. E. for 1929-30). எனினும் சம்பந்தராதிய மூவர் பாடிய தேவாரத்தையே திருஞானம் என்பது குறிக்கும் எனக்கொள்ளுதல் தகும். "சீகாழிப் பதியில் இறைவியா ரளித்த பாலடிசில் உண்டு,

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்று சேக்கிழார் பகர்வர். இதனால் ஞான சம்பந்தர் தேவாரத்தையே திருஞானம் என்று குறித்தனரோ என்று ஐயம் எழும். தலைஞாயர் என்ற ஊரிலுள்ள மூன்றாம் இராசேந்திரனுடைய 3 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட் டும் (149 of 1927), இவ்வரசனது 23ஆம் ஆட்சியாண் டுக்குரிய (கோவிலூர்) திருவுசாத்தானக் கல்வெட்டும்

(216 of 1908) சம்பந்தரைத் திருஞானம் பெற்ற பிள்ளையார் என்று குறிப்பிடுகின்றமையின் இவ்வையம் பின்னும் மிகுகின்றது. ஆனால் சம்பந்தர் முதலிய மூவர் அருளிய தேவாரத்தைக் காழித் தாண்டவராயர் என்பார் தாம் எழுதிய திருவாசக வியாக்யானத்தில், "திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தேவாரம்" என்றும், "திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தமிழாகிய தேவாரம்" என்றும் கூறியுள்ளமையால், திருஞானம் என்பது மூவர் தேவாரத்தையே குறித்ததாகக் கொள்ளலாம்.

## கூகூர்க் கல்வெட்டு

தஞ்சாவூர் ஜில்லாவில் கூகூரில் காணப்படும் கல்வெட்டொன்று (S. I. I. Vol. III No. 57), அதிராசேந்திரன் தன் 3 ஆம் ஆட்சி யாண்டில் கொடிய நோயால் துன்புற்றனன் என்றும், இவ்வரசன் உடல் நலனுறுதல் வேண்டும் என்று அவ்வூர்க்கோயில் இறைவன் திருமுன் தேவாரப்பதிகங்களை நர்டோறும் இருமுறை ஓதினர் என்றும் குறிப்பிடுகின்றது. இதனால் நோய்வாய்ப்பட்டார் உடல் நலன் எய்துதற் பொருட்டுத் திருப்பதியம் விண்ணப்பிக்கச் செய்யும் பழக்கம் பண்டு நிலவி யிருந்தது என்று அறியலாம்.

## திருக்கை கொட்டி

இச்சொற்றொடரைத் திருக்கைக்கோட்டி என்றும் படிக்கலாம். திருக்கரவாசலில் ஒரு கல்வெட்டு மூன்றும் இராசராச சோழனின் 28 ஆம் ஆட்சியாண்டுக்குரியது. (454 of 1908). அவ்வூரில் வாழ்ந்த சிவனடியார்களில் ஒருவராகிய நமச்சிவாயத் திருமேனி என்பவரால் திருக்கைக்கோட்டியில் திருமுறை ஓதுவார்க்கு உணவளிக்க

நிபந்தம் கொடுக்கப்பெற்றது—என்று அதில் உள்ளது (பக்கம் 100, A. R. E. for 1909). இவ்வரசனது 22 ஆம் ஆண்டுக்குரிய திருக் கோவிலூர் (உசாத்தானக்) கல்வெட்டு அவ்வூர்க்கோயிலில் திருக்கைகொட்டி இல்லத்து இருந்த ஓதுவார்க்கு சொக்கனுயனுன இராசகம்பீரச் சோழியவரையனுல் இறையிலிநிலம் அளித்த செய்தியைக் கூறுகிறது. திருக்கைகொட்டி இல்லம் என்பது திருமுறை ஓதும் மண்டபம் ஆகும் ; அவ்வில்லத்தைக் கண்காணிப்பவர், திருக்கை கொட்டி இல்லத்துறையார் ; இதற்கு அளிக்கப்படும் நிபந்தம் திருக்கை கொட்டிப்புறம் எனப்படும். "ஓதுவார்களை நிச்சயித்து ஓதுவாராகப் பண்ணுவதே" இத்துறையாரது கடமை என்று இக் கல்லெழுத்தில் கூறியுள்ளது ; அங்ஙனமாயின் தேவாரத்தை இசையோடு கற்பிப்பது இவ்வில்லத்திருந்த ஓதுவார் கடமையாகலாம். திருக்கை கொட்டி என்பது கையைக் கொட்டிப்பாடியருளிய சம்பந்தரைக் குறிக்கும் என்பாருமுளர் ; அங்ஙனமாயின் சம்பந்தர் திருப்பெயரால் அமைந்த தேவாரம் ஓதும் மண்டபம் என்பது பொருளாகக்கொள்ள வேண்டும். இச்சொற்றொடரைத் திருக்கைக் கோட்டி என்று படித்தால், கையைக் கொட்டிப் பாடும் ஓதுவார்கள் பலர் கூடிய கோஷ்டி என்று பொருள் படும். இந்நாளிலும் தேவார கோஷ்டி என்று கூறுதலும் இதனை வலியுறுத்தும்.

திருவீழிமிழலையில் திருமுறை ஓதுவதற்காக 'நரசிங்க தேவன்' என்பவர்காலத்தில் திருக்கைக் கோட்டி மண்டபம் கட்டப்பெற்றது. இங்குத் திருமுறை ஓதுபவர்க்கு நிலநிபந்தம் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் 9 ஆம் ஆண்டில் கொடுக்கப் பெற்றது (414 of 1908).

சீகாழியில் திருஞானசம்பந்தர் கோயிலில் உள்ள குலோத்துங்க சோழனின் கல்வெட்டொன்றில் " இக் கோயில் திருக்கைக் கோட்டியில் எழுந்தருளியிருக்கிற திருமுறைகள் திருக்காப்பு நீக்கி . . . . . திருமுறை பூசித்தும் இருக்கைக்கு . . . . . இறையிலியாக இட்டநிலம் " என்று கூறியுள்ள பகுதியால் திருமுறைகள் வைத்துப் பூசிக்கப்பெற்ற கோயில் மண்டபம் திருக்கைக் கோட்டி என வழங்கப்பெற்று வந்தது என்றும் தெரியவருகிறது (திரு. சதாசிவ பண்டாரத்தார்-திருக்கைக் கோட்டி என்ற கட்டுரையில் விரிவுகாண்க).

## முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்ருன் அந்தணரும், சிவ பூசகரும், பெண்டிரும், குருடரும் திருப்பதிகங்களைக் கற்றுப்பாடும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும், பலர் தீக்ஷை, பெற்றவராகவும் இருந்தனரென்றும், பெண்டிர் சத்துவம் தோன்ற நடித்துப் பாடினர் என்றும், திருப்பாட்டு, பெரிய திருப்பாட்டு, திருஞானம் என்ற பெயர்களான் குறிக்கப்பெற்றவை மூவர்பாடிய தேவாரங்களேயாதல் தகும் என்றும், திருக்கைக் கோட்டி என்பது யாது என்றும் அறியப்பெறும்.

# நாலாயிரப் பிரபந்தம் *

## முன்னுரை

ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிய பிரபந்தங்களை அறியாதார் இரார்; இவற்றை ஸ்ரீ வைஷ்ணவர்கள் நாடோறும் விண்ணகரங்களிற் பத்திமையோடு ஓதுதல் இந்நாளில் எங்கும் கேட்கப்பெறுகின்றது. இந்நாள் போல் முன்னாளிலும் திருமால் கோயில்களில் பிரபந்தம் ஓதுவதற்கு அரசர்கள் நிபந்தம் அளித்திருந்தனர். மக்களும் அரசியல் அலுவலரும் வைணவத்தில் பற்றுடையராய் வாழ்ந்து வந்தமையும் கல்லெழுத்துக்கள் பகர்கின்றன. இவற்றுள் சில சிறந்த செய்திகளைக் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருநெடுந்தாண்டகம்

இது திருமங்கையாழ்வார் அருளியதாகும். திருமங்கையாழ்வார் திருவாலி நகரத்தில் தோன்றியவர்; திருநறையூர் நம்பியிடம் திருவிலச்சினை பெற்றுத் திருமாலடிமைத்திறம் பூண்டவர். இவர் நாலுகவிப் பெருமாள்[1] எனப்பெற்றார். இவர் இயற்றியருளியவை சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, பெரியதிருமொழி என்பன. உபதேச ரத்னமாலை என்ற நூலுள், "மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர் கோன் ஆறங்கம்

---

* திருக் கோயிலில் வெளிவந்தது.

1. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.

கூற" என்று காணப்பெறுகிறது. இதனுன் நம்மாழ்வார் அருளியவற்றை மறையாகவும், திருமங்கை மன்னன் அருளியவற்றை ஆறங்கம் ஆகவும் முன்னேயோர் கருதினர் என்றறியலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமங்கை யாழ்வாரது திருப்பாடல்களுள் திருநெடுந்தாண்டகம் விண்ணப்பம் செய்வது குறித்துத் திருக்கோவலூர்க் கல்லெழுத்தொன்று (126 of 1900; S. I. I. VII 139) குறிப்பிடுகின்றது. திருக்கோவலூர்த் திருவிடைகழி ஆழ்வார்க்குத் திருவோணம் திருவேட்டை நாளில் நைவேத்தியத்திற்குத் திருக்கோவலூர்ச் சபையினர் நிலம் விற்றனர். இந்தத் திட்டத்தில் திரு நெடுந்தாண்டகம் ஓதுவதற்கு இடம் கொடுக்கப்பெற்றது. "இந்திரு வோலக்கத்திலே திருநெடுந்தாண்டகம் விண்ணப்பம் செய்வார்க்கு ஒருகாசு இடுவதாகவும்" என்பது கல்லெழுத்து வாசகம். இத்தருமத்தை வைகாஸநர் [2] நடத்த வேண்டும் என்று இக்கல்லெழுத்தில் உள்ளது.

## திருவாய்மொழி

இதனை அருளிச் செய்தவர் நம்மாழ்வார் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநகரி எனப் பெறும் திருக்குருகூரில் பிறந்தவர்; அவ்வூர்த் திருமால் கோயிலில் வடபுறத்துள்ள திருப்புளியின் கீழ் யோகிருந்து திருமால் திருவருளை நிரம்பப் பெற்றவர். இவருடைய பிரபந்தங்கள் திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்பன. இவை நான்கும், நான்கு வேதங்கள் என்று போற்றப்படும் பெருமையுடை

2. வைகாஸனர் - வைகானசர் - வைகானசம் என்னும் வைணவ ஆகமத்தின்படி ஒழுகுபவர்.

யனவாகும். இவற்றுள் திருவாய்மொழி விண்ணப்பம் செய்விப்பதற்குச் சோழமன்னர் காலத்துப் பல திருப்பதிகளில் நிவந்தங்கள் விடப்பட்டன என்று அறியப்படுகின்றது.

முதல் இராசேந்திர சோழனுடைய 19ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று உத்தரமேரூரில் உள்ளது (176 of 1923). உத்தரமேரூரில் மஞ்சிக்கம்[3] ஆன பூமி, 2240 குழி, ஊர்ச் சபையினர் கோயிலுக்கு இறையிலியாக அளித்தனர். இந்நில வருமானத்தை நித்திய பூசைக்கும், பல சிறப்புப் பூசைகளுக்கும் செலவு செய்யவேண்டும் என்றும், இன்னும் 1470 குழி நிலத்தினின்று வரும் வருவாயைக்கொண்டு நாடோறும் இரண்டு காலங்களிலும் மூவர் திருவாய் மொழி விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்கள்.

இனி இவ்விராசேந்திரனுடைய 26 ஆம் ஆட்சியாண்டில் உத்தரமேரூரிலேயே இராசேந்திர சோழ விண்ணகரத்து வெள்ளை மூர்த்தி ஆழ்வார்க்கு 1520 குழி நிலம் விற்று இறையிலி யாக்கப்பெற்றது; நாடோறும் 7 குறுணி நெல் மூவர் திருவாய்மொழி விண்ணப்பம் செய்யக் கொடுக்கப் பெற்றது. இங்ஙனம் ஒரு சாஸனம் (194 of 1923) குறிப்பிடுகிறது.

இனி இவ் இராசேந்திர சோழனின் (ஆட்சியாண்டு குறிப்பிடப் பெறாத) எண்ணாயிரம் என்னும் ஊர்க் கல்வெட்டொன்று (333 of 1917) திருவாய்மொழி விண்ணப்பித்தற்கும், வேதம் வியாகரணம் மீமாம்சை ஆகிய

---

3. மஞ்சிக்கம் — தரிசுநிலம்.

வற்றைக் கற்பிக்கும் கல்வி நிலையத்தை நடத்துவதற்கு மாக, 46 வேலி நிலம், இராஜராஜ விண்ணகர்க்கு அளித்த செய்தியைக் கூறுகின்றது.

மேலே கூறப்பெற்ற இராசேந்திரன் மகனாகிய முதல் இராசாதிராசனது 30 ஆம் ஆண்டுக் கல்லெழுத்து (176 of 1919) திருபுவனியில் உள்ளது. உம்பள நாட்டு மூவேந்தவேளான் என்பவர், இராசேந்திரன் திரு நாமத்தால் எடுப்பித்த மண்டபத்தில் அவ்வூர்ச் சபை யினர் கூடினர்; சேனாபதி இராசேந்திரசோழ மாவலி வாணராசர் சில தருமங்களை நடத்துவதற்கு அளித்த 72 வேலி நிலத்தை ஏற்றுக்கொண்டனர். நிலவருவாய் 12,000 கலம்; இதில் திருவிழாக்கள் நடத்தவும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உணவு அளிக்கவும், திருவாய் மொழி விண்ணப்பம் செய்யவும் 2475 கலம் நெல் பயன்படுத்தப் பெற்றது. எஞ்சிய நெல் ஒரு பெரிய கல்லூரி நடத்தப் பயன்படுத்தினர்.

இரண்டாம் இராசாதிராசனது 8 ஆம் ஆண்டுக் குரிய கல்வெட்டினின்று திருக்கோவலூரில் திருவாய் மொழி விண்ணப்பம் செய்ய ஒருபெண் ஏழுகழஞ்சு பொன் கொடுத்த செய்தியை அறிகின்றோம் (343 of 1921).

தஞ்சை மாவட்டத்துத் திருக்கண்ண புரத்துக் கல்வெட்டொன்று (503 of 1922) ஒரு அரிய செய்தியை அறிவிக்கிறது. சித்திரை மாதத்தில் கலியாணத் திருவிழா, 5 ஆம் திருவிழா; நீராவி மண்டபத்தில் இராவணாந்தகன் என்ற பீடத்தில் திருமால் தம் இரு பத்தினிமார்களோடு வீற்றிருந்து சடகோபர் அருளிய பிரபந்தங்களைக் கேட்

டருளினூர். அப்பொழுது ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பெற்றது. இதனுன் திருமால் திருமுன் நம்மாழ்வார் அருளிய பிரபந்தங்கள் விண்ணப்பிக்கப் பெற்றன என்பது அறியக்கிடக்கின்றது.

இனிக் குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 15 ஆவது, திருவரங்கத்து நம்பியும், இவன் மகன் மன்னன் திருவரங்க நம்பியும், மன்னன் பெண்ணைக் கூத்தனை திருக்கண்ண புரத்தரையரும், மன்னன் திரு விண்ணகர் நம்பியும், மன்னன் திருநாட்டு நம்பியும், திருவரங்கத்தில், திருவரங்கத்தாழ்வார் கோயிலில், திருப்பள்ளியெழுச்சி, திருவாய்மொழி விண்ணப்பம் செய்யக் கைத்தீட்டுக் கொடுத்தனர். இங்ஙனம் ஒரு கல்வெட்டில் (61 of 1892; S. I. I. IV 508) காணப் பெறுகிறது.

## திருப்பள்ளியெழுச்சி

மேற்குறித்த திருவரங்கக் கல்லெழுத்தில் திருப்பள்ளி யெழுச்சி விண்ணப்பித்தல் குறிப்பிடப்பெற்றது. திருப் பள்ளியெழுச்சியை அருளியவர் தொண்டரடிப் பொடி யாழ்வார் ஆவர். இவர் திருமண்டங்குடி என்னும் ஊரினர்; திருவரங்கம் பெரிய கோயிலில் திருமாலைத் திருப்பணி செய்துவந்தவர். இவர் அருளிய திருப்பள்ளி யெழுச்சியை விண்ணப்பித்தலைக் கல்வெட்டுக் குறிப்பிடா நிற்கத், திருவிடைமருதூர்க் கல்லெழுத்தொன்று தொண்ட ரடிப் பொடி என்ற பெயருடைய ஒரு அன்பரைக் குறிப் பிடுகின்றது. இதனுன் 10 ஆம் நூற்றுண்டிலேயே இவர் திருப்பெயரை மக்கட்கிடும் பழக்கம் வந்துவிட்டது என்பது தெளிவு.

### தேட்டருந்திறல்

இது குலசேகராழ்வார் அருளிய திரு மொழியில் இரண்டாம் பத்து. இக் குலசேகராழ்வார் திருவஞ்சைக் களத்தில் பிறந்தவர்; இராமாயணத்தில் மிகுந்த ஈடு பாடுடையவர். இவர் பாடியது பெருமாள் திருமொழி எனப்பெறும். இதனுள் ஒரு பகுதியாகிய தேட்டருந் திறல் ஸ்ரீரங்கத்தில் விண்ணப்பித்தலைப் பற்றிக் குலோத் துங்கசோழனது, ஸ்ரீரங்கத்தில் உள்ள 18 ஆம் ஆட்சி யாண்டுக் கல்லெழுத்துக் கூறுகிறது (62 of 1892; S. I. I. III 70). "ஐப்பசித் தேர்த்திருநாளிலும் பங்குனித் திருநாளிலும் தீர்த்தம் பிரசாதித்தருளின அன்று இரா, திருப்புன்னைக்கீழ் எழுந்தருளியிருந்து தேட்டருந்திறல் கேட்டருளும்போது" என்பது சிலைமேல் எழுத்து. எனவே மேற்குறித்த இரண்டு நாட்களும் புன்னையின் கீழ்த் திருமாலை எழுந்தருளச் செய்து குலசேகராழ்வார் பாசுரங்களை விண்ணப்பிக்கச் செய்தனர் என்பது அறியப் படுகின்றது. (இக்கல்லெழுத்தில் சடகோபதாசன், குருகை காவலன் என்ற பெயர் பூண்ட அரசியல் அலுவலர் குறிப்பிடப் பெறுகின்றனர்.)

### திருமொழி

திருமங்கை மன்னன் அருளியது பெரிய திருமொழி; மேற்குறித்த குலசேகராழ்வார் அருளியது பெருமாள் திருமொழி; பெரியாழ்வார் பாடியது பெரியாழ்வார் திரு மொழி; ஆண்டாள் பாடியது நாச்சியார் திருமொழி. பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர்; இவர், திருமொழியோடு திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். இவரது மகளே சூடிக் கொடுத்த நாச்சியார் அல்லது ஆண்டாள். இவ்வாண்டாள், நாச்சியார் திருமொழி யோடு திருப்பாவையும் பாடியுள்ளார். இவர்கள் அரு

ளிய திருமொழி விண்ணப்பித்தலைக் குறித்து முதல் இராசராசனது 26 ஆம் ஆட்சி ஆண்டுக்குரிய காஞ்சி புரத்துக் கல்வெட்டினின்று தெரியவருகின்றது (557 of 1919). உக்கல் என்ற ஊரின் ஒருபகுதி பெரியணஞ் சேரி. இவ்வூர் மகாசபையாரிடம் இருந்து பெருமாள் தாசர் என்பார் $17\frac{3}{4}$ வேலிநிலத்தை வாங்கியளித்து, அந் நில வருவாயிலிருந்து 58 அந்தணர்கள் திருமொழி விண்ணப்பிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்.

பிரணயபத்திரிகை

இது ஸ்ரீவில்லிபுத்தூரில் சூடிக்கொடுத்த நாச்சியார் கோயிலில் உள்ள சாஸனம். "பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர்கோன் விஷ்ணு சித்தன் கோதைக்கு நாம்வரக் காட்டின பிரணயபத்தி ரிகை" என்று ஸ்ரீரங்கநாதரே ஆண்டாளுக்கு எழுதிய கடிதம்போல் உள்ளது இச்சாஸனம். திருவரங்கத்தில் பெரியகோயிலில் சேரனை வென்றான் மண்டபத்தில் சுந்தரபாண்டியன் பந்தற்கீழ் அரியராயன் கட்டிலில் ஸ்ரீரங்கநாதர் வீற்றிருந்தருளினார். அவ்வமயம் கோதை வீட்டிலிருந்து அர்ச்சகர் குடவர் தண்டெடுப்பார் முதலிய வர்கள் வந்தார்கள். ஸ்ரீரங்கநாதர் அவர்களை எதிர் கொண்டழைப்பித்தார். கோதை வரக்காட்டின சாஸ னம் (அனுப்பிவித்த கடிதத்தை) வாசித்துக் காட்டச் செய்திகளை ஸ்ரீரங்கநாதர் அறிந்து கொண்டருளினார். "ஸ்ரீரங்கநாதர் பதினாறுமாயிரம் தேவிமாரோடும் பெரிய மண்டபத்திலே விநோதித் திருப்பதாகத் தோழியர் கோதைக்குக் கூறினர். கோதை புண்ணிற் புளிபெய் தாற்போலவும், வேலால் துன்னம் பெய்தாற் போலேயும் மனம் வெந்து நிலை தளர்ந்தாள் ;

" கொள்ளும் பயனென் றில்லாத
கொங்கை தன்னைக் கிழங்கோடு
மள்ளிப் பறித்திட் டவன்மார்பி
லெறிந்தென் அழலைத் தீர்வேனே "

என்று உள்ளே உருகி நைந்தாள்; அரங்கநாதரைப் 'பொருத்தமிலி, பெண்ணின் வருத்தம் அறியாத பெருமாள்' என்று தாய் கூறி வருந்தினாள்" என்று கோதை வரக்காட்டிய கடிதத்தில் இருந்தது. இங்ஙனம் தாய் கூறியது நம்திறத்து ஊடல்கண்டு உவப்பதற்காகவே யாகும் என்று அரங்கநாதர் கருதி, "நாம் முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று கப்பம் தவிர்ப்பது காரணமாகவும் தேவரகசியமாகவும் பெரிய மண்டபத்தில் இருந்தோம்; நாம் கோதையல்லது பிறரை விரும்புவதில்லை; நமக்கு உள்ளவாறு பல்லக்கும் குடையும், நாம் பூணும் கண்டமாலை ஆபரணங்களும், பட்டுபருத்தி சுகந்த திரவியங்களும் கோதையும் பெறவேண்டும்" என்று அருளி அடுக்களைப் புறமாகத் திடியன் ஆன திருவரங்க நல்லூரரை ஸ்ரீரங்கநாதரே அளிப்பதாக அமைந்தது இச் சாஸனம். ஸ்ரீரங்கநாதரது உத்தரவாக இச்சாஸனத் தொடர்கள் அமைந்திருப்பினும், உண்மையில் **உறங்காவில்லிதாஸன் ஆன மஹாபலி வாணாதராயர்** என்னும் (அரசியல் அலுவலாளராகிய) பரமபாகவதர் ஒருவரால் இத்தருமம் அளிக்கப்பெற்றது என்பது அறிதல் தகும் (577 of 1926; தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், பாகம் I, பக்கம் 149-151).

இச் சாஸனத்தின் பெரும்பகுதி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகியவற்றினின்று எடுத்த பல பாடற்பகுதிகளால் ஆக்கப்பெற்றுள்ளது.

ஆண்டாளின் தெய்வீக வரலாறு மக்கள் மனத்தை என்றுமே கவர்ந்துள்ளது ; இதற்கு இச்சாஸனம் சான்று பகரும். அன்றியும் திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய வற்றையும் திருமால் பக்தியில் சிறந்தோர் நன்கு அறிந்து போற்றினர் என்பதும் இதனுல் அறியலாம்.

இனிச் சகம் 1375 (கி. பி. 1453) க்குரிய கல்லெழுத்தும் (575 of 1926), சகம் 1399 (கி. பி. 1477) க்குரிய கல்லெழுத்தும் (578 of 1926) ஆண்டாளைச் சூடிக் கொடுத்த நாச்சியார் என்று குறிப்பிடுகின்றன.

கி. பி. 1546 க்குரிய பராக்கிரம பாண்டியருடைய கல்லெழுத் தொன்றிலும் (580 of 1926) நாச்சியார் திருமொழிப் பாடற் பகுதிகள் காணப்படுகின்றன.

### திருப்பதியம் விண்ணப்பித்தல்

உத்தரமேரூரில் கண்ட முதலாம் இராசேந்திரனின் 3 ஆம் ஆட்சியாண்டுச் சாஸனம் (181 of 1923) ஸ்ரீவைஷ்ணவர்கள் திருப்பதியம் விண்ணப்பித்தலைக் குறிப்பிடுகின்றது. வெள்ளைமூர்த்தி ஆழ்வார் கோயிலில் இராகவ தேவர் திருமுன் திருப்பதியம் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், திருமாலுக்கு நிவேதிக்கப்பெற்ற போனகம் திருப்பதியம் விண்ணப்பிப்பாருக்கு அளிக்கப்பெற வேண்டும் என்றும் அச்சாஸனத்தில் கண்டிருக்கிறது. இங்குக்குறித்த திருப்பதியம் என்பது நாலாயிரப் பிரபந்தமே ஆகும்.

### திராவிட வேதம்

கிருஷ்ணதேவராயர் சகம் 1445 (கி. பி. 1523) இல் வடநாட்டிற் பெற்ற பெரு வெற்றிக்குப் பின் மகாமகத்தின்

பொருட்டுக் கும்பகோணத்துக்குச் சென்றார்; சென்று திரும்புங்கால் நாகலாபுரத்துக்கு விஜயம் செய்து அங்குத் திருமாலுக்குக் கோயில் எடுப்பித்தார். அக்கோயில் கைங்கரியங்களை நடத்துவதற்கும், ஆங்குத் திராவிட வேதமும் வேதாந்தமும் ஓதுவதற்கு, அவ்வரசர் பல ஊர்களை அளித்தார் என்று நாகலாபுரத்துச் சாஸனங்கள் நுவல்கின்றன (627 and 628 of 1904 ; C. P. No. 12 of 1905). இங்குக் குறித்த திராவிடவேதம் என்பது நாலாயிரப் பிரபந்தம் என்று அறிதல் தகும். கிருஷ்ண தேவராயர் பரம பாகவதர் ; நாலாயிர பிரபந்தத்துள் இவர்க்கு மிக்க ஈடுபாடு இருந்தது. இவர் ஆண்டாள் வைபவங்களையெல்லாம் தொகுத்துச் சிறப்பாக ஒரு தெலுங்குக் காவியம் இயற்றியுள்ளார். அதற்கு ஆமுக்த மால்யதா என்று பெயர்.

## திருவாய்மொழி மண்டபம்

**திருவல்லிக்கேணி** ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் முதலாழ்வார் மூவராலும் மங்களா சாஸனம் பெற்ற பழம் பெருமையுடையது. இக் கோயிலில் சகம் 1486 (கி. பி. 1564)க்குரிய கல்வெட்டு ஒன்றில் திருவாய்மொழி மண்டபம் என்று ஒரு மண்டபம் கட்டப் பெற்றதாகக் (239 of 1903) காணப்பெறுகிறது.

## அருளாளப் பெருமாள் கோயில் சாஸனம்

அருளாளப் பெருமாள் என்பது காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாளைக் குறிக்கும். இங்குக் குறித்த சாஸனம் (33 of 1893 ; S. I. I. III 80) விக்கிரம சோழனது 9 ஆவது ஆட்சியாண்டுக் குரியது. காஞ்சிபுரத்தில் திருவத்தியூராழ்வாரை (காஞ்சிபுரம் அருளாளப் பெருமாளை)ப் பொய்கையாரும் பூதத்தாழ்வாரும் பாடினர்

என்றும், அவர்களுடைய நட்சத்திரம் திருக்கேட்டை என்றும், மாதந்தோறும் திருக்கேட்டை நாளில் அருளாளப் பெருமாள் புறப்பட்டருளி ஏகாசீதித் திருமஞ்சனமும் (81 திருமுழுக்கு), பெருந்திருவமுதும் செய்தருள வேண்டும் என்றும், இதற்கு 780 கலம் நிலம் நெல் முதற் பொருளாகத் தரப்பெற்றது என்றும் அச்சாஸனத்துள் சொல்லியுள்ளது. இவ்விரு ஆழ்வார்களுடைய திரு நட்சத்திரம் திருக்கேட்டை என்றது அக்காலத்தவர் கருத்தை யொட்டியே யாதல்கூடும். ஆனல் பொய்கை யாழ்வார் திருநட்சத்திரம் திருவோணம் என்றும், பூதத்தாழ்வார் திருநட்சத்திரம் அவிட்டம் என்றும் குரு பரம்பரைகளில் கூறப்பெற்றுள்ளன.

இனித் திருமழிசையாழ்வார் திருநட்சத்திர நாளில் ஸ்ரீபெரும்பூதூரில் திருவிழா நடத்தவேண்டும் என்று வெங்கடபதிராயருடைய தேவியார் கிருஷ்ணஜியம்மன் என்பார் பத்து வராஹன் அளித்ததாகச் சகம் 1513 (கி. பி. 1592) க்குரிய கல்வெட்டில் (195 of 1922 ; தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், பாகம் I எண் 544) காணப்பெறுகின்றது. இதனல் ஆழ்வார்களுடைய திருநட்சத்திரங்களில் திருவிழாக்கள் நடத்தப்பெற்றமையும் அறியலாம்.

## முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்ருன் பிரபந்தங்கள் திருமால் கோயில்களில் ஓதப்பெற்றன என்றும், ஆழ்வார்களின் திருப்பெயர்களை மக்கள் தம் பெயராகப் பூண்டு மகிழ்ந்தனர் என்றும், ஆழ்வார்களின் நட்சத்திரங்களில் திருவிழாக்கள் நடத்தினர் என்றும் பிறவும் அறிந்து மகிழ்வோமாக.

---

# ஸ்ரீ ருத்ராத்யயனம் *

## உருத்திரன்

"உருத்திரன் என்னும் நாமம் செந்தீப்பண்ணவன் தனக்கும் ஆமால்" என்றமையால் (கந்தபுராணம், ததீசிப் படலம், 45) படைத்துக் காத்து அழித்து மறைத் தளிக்கும் சிவபெருமானையே உருத்திரன் என்ற சொல் குறிக்கும். உருத்திரன் என்பது அசுரர்களை அழச் செய்கிறவன், எல்லாவுயிர்களிடத்தும் உள்ள துன்பங் களைப் போக்குபவன், அழுகையைப் போக்குகின்றவன், மறையாகிய ஒலியை ஊழிக் காலத்தில் முதலில் பிரம னுக்கு அருளியவன், நாதத்தால் உலகை இன்புறச் செய் கின்றவன், மறையால் அல்லது ஓங்காரத்தால் வேண்டிய வற்றை அளிக்கின்றவன், துன்ப காரணத்தைப் போக்கு கின்றவன்—என்று பல பொருள்படும்.

"இன்பம் செய்தலின் சங்கரன்; எம்பிரான்
இன்பம் ஆக்கலின் சம்பு; இடும்பைநோய்
என்ப தோட்டும் இயல்பின் உருத்திரன்"

என்று காஞ்சிப்புராணத்தில் சிவஞான முனிவரும் அருளியுள்ளார்.

"இன்னலங் கடலுட் பட்டோர் யாரையும் எடுக்கு நீரால்
உன்னரும் பரம மூர்த்தி உருத்திரன் எனும்பேர் பெற்றான்"

என்பது கந்தபுராணம்.

---

* திருக்கோயிலில் வெளிவந்தது.

## உருத்திரனே எல்லாம் ஆவன்

ஸர்வோவை ருத்ர: ருத்ராய நமோ அஸ்து
புருஷோவை ருத்ர: சன்மஹோ நமோ நம:

என்று கிருஷ்ண யசுர்வேதம் (24 ஆவது அநுவாகம்) கூறும்.

ருத்ரோ ப்ரஹ்மா, உமா வாணீ...
ருத்ரோ விஷ்ணுர், உமா லக்ஷ்மீ...
ருத்ர: சூர்ய, உமா சாயா...
ருத்ர: சோம, உமா தாரா...
ருத்ரோ திவா, உமா ராத்ரி...
ருத்ரோ வேத, உமா சாஸ்த்ரம்...
ருத்ரோ வ்ருக்ஷ, உமா வல்லீ...
ருத்ரோ கந்த, உமா புஷ்பம்...
ருத்ரோ அர்த்த அட்சர: ஸாஉமா தஸ்மை தஸ்யை நமோ நம:
ஸர்வ தேவாத்மகம் ருத்ரம் நமஸ்குர்யாத்

என்ற உருத்திர ரகச்யோபநிஷத்தில், எல்லாமாய் விளங்குபவர் ருத்ரபரமேசுவரன் என்று கூறப்பெற்றுள்ளது.

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், "வேள்வி வாயிலாக உருத்திர பரமேசுவரனையே வழிபடும் முறையை விதிக்கின்றன;" ஆகவே இந்நான்கு வேதங்களிலேயும் உருத்திர மந்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள்...

## இருக்குவேத பஞ்சருத்ரம்

இருக்கு வேதத்துள் ஐந்து உருத்திரங்கள் உள்ளன; அவற்றுள் 43 இருக்குகள் உள. இவை, "பரமேசுவரனது ஐம்முகத்திற்கும் ஐந்து உருத்திரங்களாக அமைந்துள்

ளமையின், இப்பஞ்ச ருத்ரங்களே மிகச் சிறந்தன என்று இருக்குவேதிகள் பெரிதும் பாராட்டுவர்.'' இவற்றுள் சில வற்றின் சாயணபாஷ்யக் கருத்து வருமாறு :—

எல்லா முணர்கின்றவனும், வேண்டியவற்றை அருள்கின்றவனுமாகிய உருத்திர மகாதேவனை யாம் எப்போது அழகிய துதிகளால் துதிப்போம்? (பக்கம், 1 இருக்குவேத பஞ்சருத்ரம்).

எமது கிராமத்திலுள்ள பசு எருமை முதலான மிருகங்களும், எமது மக்களும், பிணியிலாதவர்களாய் வளரவேண்டுமென்று உருத்திரனை இனிது துதிக்கின் ரேம் (பக்கம் 6).

மருத்துக்களை ஈன்ற உருத்திர பரமேசுவர! நின்னால் அருள் செய்யத்தக்க சுகமனைத்தும் எமக்கு உண்டாகுக. எம்மிடத்து, சூரியதரிசனம் எப்போதும் இருக்குமாறு செய்தருள்வாயாக. எமக்கு நல்ல மக்கள் உண்டாவார் களாுக. நாங்கள் தழைத்தோங்குவோமாக (பக்கம் 12).

உருத்திரபரமேசுவர! அனைவருக்கும் இன்பை யளித்தருளும். உனது திருக்கரத்தால் என்னைப் பாது காத்தருள்வாயாக. எனது பாவத்தைப் போக்கி எனது பிழைகளையும் பொறுத்தருள்வாயாக (பக்கம் 16).

உருத்திரபரமேசுவர! நீ எல்லாம் செய்தற்கு உரியோ னுதலின் உலகனைத்தையும் அடக்கி ஆளுகின்றனை. உனையன்றி ஒருவரும் வல்லுநர் இலர். ஆதலின் நீயே முத்தொழிற் குரியான் (பக்கம் 17).

உருத்திர பரமேசுவரன், உண்மையில் மண்ணிலுண் டான மக்களை ஐசுவரிய முடையவர்களாகவும், விண்ணி

லுண்டானவர்களைச் சாம்பிராச்சியம் உடையவர்களாகவும் எண்ணியருள்கின்றனன். (நேரில் கூறல்) உருத்திர பரமேசுவர! எமது மக்களைப் பிணியிலாதவர்களாய்ச் செய்வதுடன் எமது வீட்டிற்கும் வந்தருள்வாயாக! (பக்கம் 21).

சாமவேதருத்ரீயம்

உருத்திரபரமேசுவரன், 'சாமகானப்பிரியன்' ஆகலின் சாமவேத உருத்திரத்தை ஓதினல் பரமேசுவரனது பேரன்பினை எளிதிற் பெறலாம். சாமவேத உருத்திரத்தில் 11 மந்திரங்கள் உள்ளன. சில ஆர்ச்சிகங்கள் எனப்பெறும்; அதாவது இருக்கு மந்திரத்துக்குள்ள எழுத்துக்களைக் கொண்டே முடிந்து நிற்பது. தோத்திரத்தால் ஆனது ஸ்தௌபிகம் எனப்பெறும். இப்பதினொரு மந்திரங்களும் உருத்திர சங்கிதை எனப் பெயர்பெறும். சாமவேத பிராமணம் என்னும் சுருதியிலும் "ஆவோ ராஜா" என்றல் தொடக்கத்து உருத்திர சங்கிதையை நன்கு ஓதி உருத்திரனுக்கு அன்பு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

"ஆவோ ராஜா" என்பது சாமவேதத்தில் உருத்திர சங்கிதையில் முதன் மந்திரம் ஆகும். இறப்பதன் முன்னரே பரமேசுவரனை வழிபட வேண்டும் என்று ஒரு ரிஷி தன் புதல்வர்களுக்கு அறிவுறுத்தும் முறையாக இம்முதன் மந்திரம் அமைந்துள்ளது.

அதர்வண ருத்திர மந்திரங்கள்

'த்ரயீ' என்ற சொல் ரிக் யஜுர் சாம வேதங்களையே குறிப்பதால் அதர்வண வேதத்தை வேதமாகக் கருதாதிருந்தனர் எனலாம். ஆனல் யாகங்களை வெளியிலிருந்து

பிறர் கெடுக்காதவாறு செய்யவும், யாகத்தில் யாருக்கேனும் நோய்வரின் அந்நோயைப் போக்கவும், அதர்வண வேதம் இன்றியமையாததாயிற்று.

இவ்வதர்வண வேதத்துள்ளும் 75 உருத்திர மந்திரங்கள் உள்ளன. சிலவற்றின் பொருள் பின்வருமாறு:—

பச்சை ஊன் உண்ணும் காக்கை முதலான பறவைகளும், ஈக்களும், பொதுவாய பறவைகளும் உணவில் உட்காராதபடி அருள்புரிவீராக (2).

சுவர்க்கத்தில் இரவியாகவும், அந்தரிக்கத்தில் வாயுவாகவும், பூமியில் அக்கினியாகவும் விளங்கும் உருத்திர பரமேசுவர! உனக்கு வணக்கம் (4).

உயிர்களைப் பரிபாலிக்கும் உருத்திர பரமேசுவர! உனது திருமுகத்துக்கு வணக்கம். உயிர்களைப் படைப்போய்! உனது திருமுகத்துக்கு வணக்கம். இரவிமதி தீ என்னும் உனது முக்கண்ணிற்கும் வணக்கம் (5).

உருத்திரபரமேசுவர! உனக்கு மாலைப் போதில் வணக்கம்; காலைப் போதில் வணக்கம்; இரவில் வணக்கம்; பகலில் வணக்கம் (16).

......போற்றத்தக்க கிரண மண்டலத்தின் நடுவிலிருந்து வானின் மழையைப் பெய்விக்கின்ற உனக்கு வணக்கம் (24).

உருத்திரபரமேசுவர! எமது பிணியை நலப்படுத்தியருள்வாயாக; எமக்கு நலம் தருவாயாக; எமது சுற்றத்தார்கள் அனைவரும் பிணியால் பீடிக்கப்படாதவர்களாகுக; பிணிகளும் அடங்கி ஒழிய உலகனைத்தும்

எமக்கு மங்களமாகும்; எல்லாத் தேசத்தவர்களும் நலமடைவார்களாக! (6—57—2).

தீ, நீர், செடி, கொடி இவற்றுள் இருக்கின்றவனும், எல்லாப் புவனங்களின் பிராணிகளையும் ஆக்கிக் காத்தழிப்பதில் வல்லுநனுமாகிய அக்கினி வடிவ ருத்திரனுக்கு வணக்கம் (7—61—1).

யசுர்வேத சதருத்ரீயம்

எசுர் வேதத்தில் சதருத்ரீயம் என்ற பகுதி உருத்திர பரமேசுவரனை நேரே கூறும் பகுதியாகும். இதனை எசுர் வேதிகள் பெரிதும் பாராட்டுவர். இது எசுர் வேதத்தில், நான்காம் காண்டத்தில், ஐந்தாம் பிரபாடகத்தில், பதினொரு அநுவாகங்களாக உள்ளது. இதில் உருத்திர மந்திரங்கள் நூறுயிருத்தல்பற்றிச் சதருத்ரீயம் எனப் பெற்றது என்பர் சிலர்.* இது உருத்திராத்யாயம் எனவும் கூறப்படும்.

சதருத்ரீயச் சிறப்பு: "தேவர்களுள் உருத்திர மகேசுவரனைப் போலவும், புராணங்களுள் கந்தபுராணம் போலவும், மிருதிகளுள் மனுமிருதியைப் போலவும், வேதத்தில் சதருத்ரீயம் சிறந்து விளங்குகின்றது" என்று வித்யாரண்ய முனிவர் உருத்திரகல்பம் என்ற நூலுள் கூறியுள்ளார். கைவல்ய உபநிடதம், "எதை ஜபித்தால் முத்தியாம்? யாக்யவல்கியர்! கூறுவாயாக; சதருத்ரீயத்தால் முத்தியாம்" என்றும், "எவன் சதருத்ரீயத்தை ஓதுகின்றானோ அவன் அக்கினி புனிதன் ஆகின்றான்"

* இஃது எங்ஙனம் பொருந்தும் என்பது புலப்படவில்லை.

என்றும் கூறுகின்றது. அத்திரி ரிஷி, "எல்லாவற்றுக்கும் இதுவே பிராயச்சித்தமுமாகும்" என்று கூறியுள்ளார். "இது எல்லாப் பயன்களையும் அளிக்கும்" என்று ஒரு வாக்கியம் செப்புகின்றது.

இச்சதருத்ரீயத்தில் பிரபாடகம் 5 அநுவாகம் 8 இல் பதினொராவது மந்திரம் நம:சிவாசய என்பது. எனவே சிவநாமம், வேதத்தின் இருதயமாகக் கருதப்படும் உருத்திர மந்திரங்களின் நடுவில் இருப்பது, இதற்குரிய தனிச்சிறப்பு ஆகும்.

பாகுபாடு: சதருத்திரீயம் 11 அநுவாகங்களில் உள்ளது. இப்பதினொரு அநுவாகங்களிலும் ரிக்-யசுர் ஆகிய மந்திரங்கள் கூறப்பெறுகின்றன. 1ஆவது அநுவாகத்தில் 15 இருக்கும், 2 முதல் 9 வரை அநுவாகங்களில் முறையே 13, 17, 17, 15, 15, 16, 17, 19 யசுசும், 10ஆவது அநுவாகத்தில் 12 இருக்கும், 11 ஆவது அநுவாகத்தில் 10 இருக்கும் 3 யசுசும், ஆக இருக்கு 37, யசுசு 132, ஆக 169 மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.†

## பெயர் வகைகள்

உருத்திரம், உருத்திர ஏகாதசனி, ஸ்ரீருத்ரம், மகாருத்ரம், அதிருத்ரம் என ஐந்துவகைப்படும் :—

அவற்றுள் ஒரு உருத்திரமும் ஒரு சமகமும் சேர்ந்தது, உருத்திரம் எனப்படும்.

---

† திரு. C. K. S. பெரிய புராணம் உருத்திர பசுபதி நாயனுர் புராண வுரைகாண்க

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

பதினொரு உருத்திரங்களும் ஒரு சமகமும் சேர்ந்தது, உருத்திரஏகாதசனி;

121 உருத்திரங்களும் 11 சமகங்களும் சேர்ந்தது, ஸ்ரீருத்ரம்;

1331 உருத்திரங்களும் 121 சமகங்களும் சேர்ந்தது, மகாருத்ரம்;

14641 உருத்திரங்களும் 1331 சமகங்களும் சேர்ந்தது, அதிருத்ரம்.

**யசுர்வேத உருத்திர மந்திரங்கள்**

மேலே குறிப்பிட்டவாறு உள்ள 169 மந்திரங்கள் சிலவற்றின் உரைகள் கீழே தரப்பெற்றுள்ளன:—

(4-5-2-6)* குடும்ப வாழ்வைத் தொலைக்கின்றவனும், மண்ணுலகம் முதலிய உலகங்களைப் பரிபாலிக்கின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-2-7)வில்லால் இடரைக் களைந்து நம்மைப் பரிபாலிக்கின்றவனும், க்ஷேத்திரங்களைப் பாதுகாக்கின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-4-10) சேனைகளான உருத்திரர்களே! உங்களுக்கு வணக்கம்; சேனைத் தலைவர்களான உருத்திரர்களே! உங்களுக்கு வணக்கம்.

---

* 4ஆம் காண்டம்; 5 ஆம் பிரபாடகம்; 2 ஆம் அநுவாகம்; 6 ஆம் மந்திரம். இங்ஙனமே மற்ற எண்களையும் அமைத்துப் படிக்க.

(4-5-4-11) தேரைச் செலுத்துகின்றவரும், தேரை நிறுத்திக் கொள்ளுகின்றவரும் ஆன உருத்திரர்களுக்கு வணக்கம்.

(4-5-4-12) தச்சர்களான, தேர் செய்கின்றவர் களான உருத்திரர்களே உங்களுக்கு வணக்கம்.

(4-5-5-5) ஆயிரங் கண்களையும் நூற்றுக்கணக் கான விற்களையுமுடைய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-5-6) கைலயங்கிரிவாசனும், திருமாலின் திரு மேனி கொண்டவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-5-7) மேகமாய் மழை பெய்விக்கின்றவனும், பாணத்தைத் தாங்குகின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-5-11) உலகம் தோற்று முன் உள்ளவனும், அவையின் கண் தலைவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-6-7) தான்ய விசேடமாயும் நெற்குவியல் வடிவாயுமிருக்கின்ற உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-1) உமையுடன் கூடிய உருத்திரனுக்கும், துன்ப காரணத்தை நீக்குகின்ற உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-8-3) இன்பளிக்கும் உருத்திரனுக்கும், பசுக் களைப் பாதுகாக்கும் உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-8-8) ஓங்காரப் பொருளாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-10) தந்தை முதலானோர்களால் உலக சுகத்தைக் கொடுக்கின்றவனும் குரு நூல்கள் முதலிய வற்றால் முத்திச் சுகத்தைக் கொடுக்கின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-11) மங்கள வடிவனும், அற்புதமுடைய மங்களவடிவனும் ஆகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-12) தீர்த்தங்களிலும், நதிக்கரையில் தாபித்துள்ள இலிங்கத்திலும் உள்ள உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-8-12) பாவத்தை நன்கு போக்குகின்றவனும், பந்தத்தை நீக்குகின்றவனுமாகிய உருத்திரனுக்கு வணக்கம்.

(4-5-9-3) சடைமுடி யுடைய உருத்திரனுக்கும், அன்பர்களைப் பாதுகாக்க முன் நிற்பவனாகிய உருத்திரனுக்கும் வணக்கம்.

(4-5-10-17) விரும்புகின்ற பொருள்களைக் கொடுக்கும் உருத்திரர்களே ! வணக்கம்.

(4-5-10-18) பாவங்கள் முழுவதையும் தொலைத்தருள்கின்ற உருத்திரர்கட்கு வணக்கம்.

நன்றியுரை

இதுகாறும் கூறப்பட்ட செய்திகள் யாவும் கா சிவா சிசிவானந்த யதீந்திர சுவாமிகளால் மொழி பெயர்க்கப்

பெற்றுச் சென்னை, திருவொற்றியூரான் அடிமை என்னும் **திரு. த. ப. இராமசாமிப் பிள்ளையவர்களால் தமது** சொந்தப் பொருட் செலவில் பதிப்பித்து நன்கொடையாக அளிக்கப்பெற்ற " திருநான்மறை உருத்திரத்திரட்டு " என்ற 167 பக்கமுள்ள நூலுள் கண்டவற்றினின்று வேண்டிய அளவு எடுத்துக் கொள்ளப்பெற்றன. அந் நூலை யான் படித்து இன்புற்றேன்; 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று கருதி, அந்நூல் பகுதிகளுள் ஈண்டைக்கு ஏற்பனவற்றை மட்டும் எடுத்துக்கொண்டிருக்கிறேன். அம்மொழி பெயர்ப்பாசிரியருக்கும், பதிப்பாளர் அவர்களுக்கும் எளியேன் மிகவும் கடமைப்பட்டவனாவேன்.

## உருத்திரப் பெயருடையார் முன்னரும் பின்னரும்

கடியலூர் உருத்திரங் கண்ணனார்: இவர் சங்கப் புலவருள் ஒருவர். கடியலூர் என்பது பாண்டி நாட்டின் கண்ணதோரூர். பத்துப்பாட்டுள் கண்ட பெரும்பாணாற்றுப், படையும் பட்டினப்பாலையும் இவர் பாடியனவே ஆகும். கண்ணன் என்ற இயற் பெயருடைய இவர், உருத்திரப் பெயரும் கொண்டுள்ளார். இவர் பெயரும் உருத்திரன் என்று இன்றி, உருத்திரம் என்றிருத்தலால், ஸ்ரீ ருத்திரத்தை ஒட்டியே இவர் பெயர் அமைந்திருத்தல் கூடும் என்னலாம். இவர் பாடியவை குறுந்தொகை 352 முதலியன.

உருத்திரனார்: இவரும் சங்க காலப் புலவருள் ஒருவர். இவர் பாடியவற்றுள் ஒன்று குறுந்தொகை 274.

சோழன் நல்லுருத்திரன்: இவர் கலித் தொகையுள் முல்லைக்கலி பாடியவர்; இவர் பாடியது புறம் 190.

**உருத்திர சன்ம கண்ணர்:** இவர் திருவள்ளுவ மாலை 31 ஆம் செய்யுளைப் பாடியவர்.

**உருத்திர சன்மனார்:** இவர் இறையனார் களவிய லுரை கேட்க நடுவராய் அமர்ந்திருந்தவர்; அகநானூற் றைத் தொகுத்தவரும் இவரே.

## உருத்திர பசுபதி நாயனார்

இவர் சோழ நாட்டின் கண்ணதாகிய திருத்தலையூர் என்ற தலத்தில் வாழ்ந்த மறையவர்; சிவனடிமைத் திறம்பூண்டவர்; பசுபதியார் என்ற பெயரினர்; வேதத்து நடுவணுள்ள உருத்திர மந்திரத்தை இடையறாது ஓதும் நாவர்; இவர் பொய்கையையடைந்து, கழுத்தளவு நீரில் நின்று* கை உச்சிமேல் குவித்துச் சிவபிரானிடத்து அன்பு பூண்டு உருத்திரத்தைப் பயிலத் தொடங்கினார்; "அருமறைப் பயனாகிய உருத்திரம் அதனை" இரவும் பகலும் இடையீடின்றி ஓதியமையின் உமையொரு பாகனார் உவந்தருளிச் சிவபுரியில் தன்னடிக் கீழ் இவரைச் சேர்ப்பித்துக்கொண்டார். "நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்" உருத்திர பசுபதியார் என்ற திருப்பெயர் இவர்க்கெய்தியது.

## ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்

இப்பெயரால் கோயில்களில் முன்னாளில் ஒரு குழுவினர் இருந்தனர் எனக் கல்லெழுத்துக்கள் நவில் கின்றன.

---

* தாராசுரம் கோயில் சிற்பத்தில் இவர் மார்பளவு நீரில் நிற்பதாக உள்ளது.

திருக்கழுக்குன்றத்துத் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயிலில் தொண்டர்கள் நாயன் திருக்காவணத்துத் திருட்டு வழக்கு ஒன்றை விசாரிப்பதற்குக் கூடியவர்களில் 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்கள்' கூறப் பெறுகின்றனர் (S. I. I. Vol. V. 479). இது வீர கம்பண்ண உடையார் கல்லெழுத்து.

திருமணஞ்சேரியில் கண்ட மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 20 ஆவது ஆட்சியாண்டுக் கல்லெழுத்தினின்று 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்' ஒரு தருமத்தை ஏற்று நடத்த ஒப்புக் கொண்டனர் என்று (புதுக்கோட்டைச் சாஸனங்கள்-152 இல்) தெரிய வருகிறது.

சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவருடைய 3 ஆம் ஆண்டுச் சாஸனத்தினின்று திருக்கொடுங்குன்றமுடைய நாயனார் கோயிலில் (பிரான்மலையில்) 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்' இருந்தனர் என அறியலாம் (430 of Vol. VIII).

வீரகம்பண்ண உடையாரின் (சகரயாண்டு 1297க்குரிய) ஆறகளூர்க் கல்லெழுத்து (431 of 1913) 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்களும்' கோயில்பணியாளரும் கூட்டம் கூடியிருந்து எண்ணுடைய நாயனார் என்பார்க்குக் கோயில் அலுவல் பார்க்க உத்தரவு அளித்தனர் என்று கூறுகிறது.

### உருத்திரகணத்தார்

திருவாமாத்தூர்க்கோயிலில் காரியம் பார்ப்பவர்களுக்குரிய ஊதியத்தை, ஊர்ச்சபையினரும், சிவப்பிராமணரும், உருத்திரகணத்தாரும் சேர்ந்து நிர்ணயித்தனர்

என்று ஒரு கல்லெழுத்து (18 of 1922) இயம்புகிறது. இவ்வுருத்திரகணத்தார் இறைவன் முன்னிலையில் திருப் பாடல்கள் (Sacred Hymns) பாடுபவர் என்றும் இதில் கூறப் பெற்றுள்ளது.

மேலே குறித்த கல்லெழுத்துச் செய்திகளால் ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர் என்று ஒரு குழுவினர் திருக் கோயில்களுள் இருந்தனர் என்றும், கோயில் நிர்வாகத் தில் அவர் பங்குபற்றினர் என்றும், அவர்கள் பக்திப் பாடல்களைப் பாடுபவர் என்றும் அறியலாம். இம் மாகே சுவரருக்குத் தரப்பெற்ற ஸ்ரீருத்ர என்ற அடைமொழி யால், இவர்கள் இறைவன் திருமுன் ஸ்ரீருத்ரம் ஓதும் தொண்டில் ஈடுபட்டவராதல் கூடும் என்றும் ஊகித்து அறியலாம்.

திருவாமாத்தூர்க் கல்லெழுத்துள் கூறப்பெற்ற உருத்திரகணத்தார் மேற்குறித்த ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசு வரர்கள் போன்றவரா அல்லது அவர்களின் வேறனவரா என்று அறியக் கூடவில்லை. "உருத்திர பல்கணத் தார்க்கு அட்டிட்டல் காணதே போதியோ பூம்பாவாய்" என்ற ஞானசம்பந்தர் வாக்கு இங்கு நினைவுக்கு வரும். இப்பாடலுக்கு விரிவுரை தந்த சேக்கிழார்,

'மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்'

என்றருளினர். இதனல் உருத்திர பல்கணத்தார் என்பவர் சிவனடியார்கள் (-பன்மாகேசுவரர்) என்று

அறியப் பெறுகிறது; இவர்களை ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர் என்று கொள்வதற்குச் சேக்கிழார் விளக்கம் இடம் தரவில்லை. எனவே உருத்திரகணத்தார் வேறு, ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர் வேறு என்று கோடல் பொருந்தும்.

இனி உருத்திர பண்டிதர் என்று ஒருவர் மேற் குறித்த திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டில் (S. I. I. Vol. V 479) குறிக்கப் பெறுகிறார்; இத்தலத்தில் கண்ட எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரது கல்லெழுத்தினின்று (481 of Vol. V) சிவருத்திர பண்டிதர் என்று இன்னொருவர் பெயர் தெரியவருகிறது. இராசராச சோழனின் தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்வெட்டினின்று, இராசராசேச்சரத்தில் நியமித்த பிடாரர்களில் (ஓதுவார்களில்) மூவர் ருத்ரசிவன், என்ற தீக்ஷாநாமம் உடையராகக் காணப் பெறுகின்றனர். இதனான் உருத்திரப் பெயரைப் பின்னோரும் பூண்டிருந் தனர் என்பது தெளிவு.

ஸ்ரீருத்ர அத்யயனம்

இனி ஸ்ரீருத்ரம் திருக்கோயில்களில் ஓத நிபந்தங் கள் விட்டமையும் கல்லெழுத்துக்களினின்று அறியலாம்.

திருக்கடவூர்க்கருகில் திருக்கடவூர் மயானம் என்ற தலம் உளது. அங்குக் கண்ட திருபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானது 22ஆம் ஆட்சிஆண்டுக் கல்வெட்டில் (84 of 1906) வேதம் ஓதவும், ஸ்ரீருத்ரம் அத்யயனம் செய்யவும், வீணை வாசிக்கவும் நிலம் ஒதுக் கப் பெற்ற செய்தி கூறப் பெற்றுள்ளது. [இக் கல் லெழுத்தில் திருத்தொண்டத் தொகை மங்கலம், சிவ

பாத சேகர மங்கலம் என்ற ஊர்கள் குறிக்கப் பெற்றுள்ளன.]

மேற்குறித்த அரசனது திருநெல்வேலிக் கல்வெட்டு (432 of S. I. I. Vol. V ; 141 of 1894) ஸ்ரீருத்ராத்யயனம் செய்வதைக் குறித்து நிபந்தம் விட்ட செய்தியைக் கூறுகிறது. இவ்வரசனது பிள்ளைகளில் ஒருவர் சுந்தரபாண்டியதேவர் ; இவர் புரட்டாசித் திங்கள் மூல நாளில் பிறந்தவர். அம்மூலநாள் முதற்கொண்டு திருநெல்வேலியுடையார் திருமுன்பு சிறு காலைச் சந்தியிலே நாடோறும் ஸ்ரீருத்ராத்யயனம் செய்யும் பன்னிருவர்க்குப் போஜன முள்ளிட்டு வேண்டுவனவற்றுக்கு ஸ்ரீருத்ராத்யயனப்புற இறையிலியாக நிலம் ஒதுக்கப்பெற்றது.

இனித் திருபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடுங் கொண்டு முடிகொண்ட சோழபுரத்தில் (பழையாறையில்) வீராபிஷேகம் பண்ணியருளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்குயாண்டு பதினேழாவதின் எதிரா மாண்டின் எதிராமாண்டு கொடுத்த கல்வெட்டில் ஸ்ரீருத்ராத்யயனம் பற்றிய செய்தி சொல்லப்பட்டுள்ளது (422 of S. I. I. Vol. V ; 433 of 1894). திருநெல்வேலியில் ஆலால சுந்தரர் திருமடத்தில் சே(ய்)ஞலூர் திருவெண்காடுடையான் அனவரதானனை அணுக்கநம்பி என்ற தபஸ்வி ஒருவர் இருந்தார். இவருடைய தந்தை திருவெண்காடுடையானை அணுக்கநம்பி என்ற பெயருடையவர் ; அவருக்குத் திருநெல்வேலி (யுடைய நயினார்) கோயிலிலே சிறுகாலைச் சந்தியிலே ஸ்ரீருத்ரம் அத்யயனம் பண்ணுதற்கு இருபத்தஞ்சச்சு அளிக்கப் பெற்றது. இவ்விருபத்தைந்து அச்சையும் பலரிடத்திலே கோதைப் பிராட்டி மங்கலத்தில் நெல் வட்டிக்குக் கொடுத்தார் ;

30 கலம் நெல் வட்டியாக வந்தது. இவ்வட்டியைப் பெற்றுக் கோதைப் பிராட்டி மங்கலம்......... ஆனந்த பிள்ளை என்பாரும், அவர்க்குப் பிறகு அவர் மகனும் ஸ்ரீருத்ராத்யயனம் செய்தனர். இத்தொகையைக் கடனாகப் பெற்றவர் திருப்பிக் கொடுத்துவிட்டனர். ஆனந்த பிள்ளை, குருகத்தி குண்டூர் ஸ்ரீமாதவபட்டன் என்பாரிடம் 17 அச்சுக் கொடுத்துச் சிறிது நிலம் விலைக்கு வாங்கினார். எஞ்சிய பணம் (8 அச்சு) இவ்வானந்த பிள்ளை மகன் பெருமாள் கையில் கொடுக்கப்பெற்றது. இவ்வச்சு எட்டால் வந்த பலிசையும், நிலத்தினின்று பெற்ற நெல் முப்பதின்கலமும் தக்ஷிணையாகக் கொண்டு ஷெ பெருமாளும் அவன் வர்க்கத்தாரும் அத்யயனம் பண்ண வேண்டும் என்று ஏற்பாடு செய்யப் பெற்றது.

புராணங்களில்

ஸ்ரீருத்ரம் ஓதியவர் சிவலோகத்தில் வீற்றிருப்பர் என்று பரஞ்சோதி—திருவிளையாடற் புராணம், வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலத்தில், செய்யுள் 45 இல் சொல்லப் பெற்றுள்ளது:—

"மறைக ளின்சத வுருத்திர மந்திரம் நவின்றோர்
நிறைகொள் கண்டிகை நீரணி நீரர் யாரேனும்
குறிகு ணங்குலன் குறித்திடா தன்பரைச் சிவனென்
றறியு மன்பினாற் பிறவிவேர் அறுத்தவர் இவர்காண்."

இனிச் சேது புராணத்தில் சீருருத்திரம் ஓதுவார் நரகம் புகார் என்று கூறப்படுகிறது. அப்பாடல்:—

அண்ணலும் இராம நாதன் அபிடேக காலந் தன்னில்
நண்ணுசீர் உருத்தி ரத்தை நமகமார் சமகம்* தன்னைப்
பண்ணமர் பவமா னத்தைப் பஞ்சசாந் தியைமுன் னுக
எண்ணுமா மந்தி ரங்கள் இயம்புவான் நிரயம் எய்தான்.''

காஞ்சிப்புராணம் வாணேசப்படலம், செய்யுள் 106,

'' என்ற வாய்மொழி கேட்டலும்
தொழுதெழுந் தியாதவர் குலத்தோன்றல்
மன்ற மாமறை முழுவதும்
முழுவதும் உருத்திரன் எனுமாற்றுல்''

என்ற வரிகளில் 'எல்லாப் பொருள்களும் உருத்திரனே என்பது திருவுருத்திரத்தில் கூறப்பெற்றது' எனச் சிவஞானமுனிவர் புகன்றுள்ளார்.

திருநெறிக் காரைக்காட்டுப் படலம் 49 ஆம் செய்யுளில், ''உருத்திரமும் கணித்துள்ளப் புண்டரிகத்துமைபாகன் திருப்பதங்கள் சிந்தித்து'' என்று உருத்திரம் ஓதுதலும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

முடிப்புரை

எனவே ஸ்ரீருத்திரம் ஓதுதல் இடைக் காலத்துப் பெரும்பான்மை என்று அறிய வருகிறது. ஆகவே ''இவ்வுருத்திரத்திற்கு உரியவர், தமது வாழ்வை வீணாகப் போக்காது, சிவனை மறவாத சிந்தையோடும், இதனை நியமமாக ஓதுக!'' உய்க !!

---

* ச என்பது உம்மை ; மே என்பது எனக்கு ; இவ்விரண்டு சொற்களும் மிகுதியாய் இருத்தல் பற்றிச் சமகம் என வழங்கப் பெறும் ; சமக மந்திரத்தால் விரும்பியவைகள் வேண்டப்படுகின்றன.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR MADRAS-41.

# சுந்தரர் *

## முன்னுரை

சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும், சுந்தரரும் திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் பாடிச் சைவம் பரப்பியவராவர். இம் மூவரும் பல்லவப் பேரரசு நிகழ்ந்த காலத்தில் திகழ்ந்தவர்கள். சுந்தரர் தம் நாளிலும் தமக்கு முன்னும் இருந்த அடியார்களைத் திருத்தொண்டத் தொகையால் துதித்தார். அந்நாள் முதல் பெரிய புராணம் பாடப்பெற்றது வரையிலும், அதற்குப் பின்னும், செந்தமிழ் நாட்டுச் சான்றோர் அளவிலாத பெருமையுடைய அடியார்களை அமயம் வாய்ப்புழி யெல்லாம் போற்றியுள்ளனர் என்பது கல்லெழுத்துக்களால் அறியப்படுவதாம். சுந்தரரைக் குறித்துக் கல்லெழுத்துக்களினின்று அறியப்படுவனவற்றுள் சிலவற்றை இனிக் காண்போம்.

## ஆலாலசுந்தரர்

ஆலால சுந்தரர் என்பது சுந்தரர் திருக்கயிலையில் இருந்தபொழுது கொண்ட திருப்பெயர் ஆகும். இது திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் ஒரு விளாகத்துக்குப் பெயராயமைந்திருந்தது.[1]

---

* தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாகிய ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலரில் வெளிவந்தது.

1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பாகம் I, சாஸனம் 523; 203 of 1912.

"ராஜ நாராயண சம்புவராயர்க்கு யாண்டு ஏழாவது......சிவத்துரோகிகளை ஆராய்ந்து......இவர்கள் மனையும் காணியுமாய்ச் சண்டேசுவரப் பெருவிலையாக விற்று அம்மனைகள் நீக்கி நின்ற மனைகளும் காணியுமாய்க் கல்வெட்டினவிடத்தில்...... நங்காம்புலமான ஆலால சுந்தர விளாகம் மூன்றில் ஒன்று......"[2]

அன்றியும் திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிஷேகம் செய்தருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவரின் 17ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1233 இல்) திருநெல்வேலியில் **ஆலாலசுந்தரர் திருமடம்** என்று ஒரு மடம் குறிக்கப் பெற்றுள்ளது.[3] எனவே ஆலாலசுந்தரர் என்ற பெயர் போற்றப் பெற்றமை தெளிவு.

## இசைஞானியார்

இவர் சுந்தரரின் தாய். இவ்வம்மையாரின் பெயரை இரண்டாம் குலோத்துங்க சோழருடைய (1113-1150) திருவாரூர் வடமொழிக் கல்வெட்டினின் றறியலாம்[4]. "ஆளுடையநம்பி மாதாக்கள் இசை ஞானியார்" என்ற அப்பகுதி தமிழ் எழுத்துக்களில் உள்ளன. இக்கல்லெழுத்தில் சுந்தரர் ஆளுடைய நம்பி என்று குறிக்கப்பெறுதலையும், அவர் தாயார் பெயர் இசை ஞானியார் என்பதும்,

2. இக் கல்வெட்டில் திறக்கப் பாடுவார் மனை, திருநாளைப் போவான் விளாகம் முதலியவை குறிக்கப் பெற்றன.
3. S. I. I. Vol. V, No. 422; 133 of 1894.
4. S. I. I. Vol IV, No. 397; 73 of 1890.

அவ்வம்மையார் ஞானசிவாசாரியார் என்பவருடைய மகள் என்பதும், சைவ கௌதம கோத்திரத்தில் அவ்வம்மையார் பிறந்தார் என்பதும் அறிதற்பாலனவாம்.

### நம்பியாரூரர்

ஆளுடைய நம்பி என்றமைபோல, நம்பியாரூரர் என்றும் சுந்தரர் குறிக்கப் பெறுகிருர். இதனை வீரபாண்டிய தேவரது திருநெல்வேலிக் கல்லெழுத்தினின்றும்,[5] இராசராசனது தஞ்சை இராசராசேச்சரத்துக் கல்லெழுத்துக்களினின்றும்[6] அறிகிறேம். முதலாம் இராசேந்திரனின் 20 ஆம் ஆட்சிக்குரிய திருமழபாடிக் கல்வெட்டு, நம்பியாரூரனர் படித்தைத் திருப்பள்ளித் தாமப்பிச்சன் எழுந்தருளுவித்து நிலம் அளித்ததாகக் கூறுகிறது.[7] முதல் இராசராசனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் கூகூர்க் கோயிலில் நம்பியாரூரர் கோவிலில் சித்திரைத் திருவிழா நடத்த நிபந்தம் அளித்ததை அறிவிக்கிறது.[8] இராசராசன் திருப்பதியம் ஓத நியமித்த 48 பிடாரர்களில் இருவர்க்கு ஆரூரர் என்ற பெயரும், இன்னும் இருவர்க்கு நம்பியாரூரர் என்ற பெயரும் அமைந்திருந்தமை அறிகிறேம்.[9]

### தடுத்தாட்கொண்டருளிய நாயனர்

சுந்தரர்க்குத் திருமணம் நிகழவிருக்கையில், சிவபெருமான் கயிலையில் அருளிய வண்ணம் தடுத்தாட்

---

5. S. I. I. Vol V, No. 418; 129 of 1894.
6. S. I. I. Vol. II, Part II No. 38.
7. 37 of 1920.
8. 299 of 1907.
9. S. I. I. Vol. II, Part III, No. 65.

கொள்வான் வேண்டிக் கிழவனாராக வந்து, சுந்தரரை நோக்கித் தமக்கு அடிமை செய்யவேண்டும் என்றார். இருவர்க்கும் வாது நிகழ்ந்தது. திருவெண்ணெய் நல்லூரில் இவ்வழக்கு விசாரிக்கப் பெற்றது. கிழவனாரே வென்று பணி செய்யவேண்டுமென்றார். இங்ஙனம் சிவபெருமான் தடுத்தாட்கொண்டமையின், "தடுத்தாட் கொண்டருளிய நாயனார்" என்றும், வழக்கில் வென்றமையின், "விரைந்து வெல்லும் பெருமாள்" என்றும், வழங்கப்பெற்றார். இவ்வழக்கு அரிய வழக்கு என்பதை நாம் அறிவோம். இவ்வரிய வழக்கினை வென்றமையின் சிவபெருமான் "அரியவான வழக்கு வென்ற பெருமாள்" எனப்பெறுதல் பொருந்தும். இதனை நினைவு கூரும் நிலையில் திருவெண்ணெய் நல்லூர்க்கு அருகில் ஓரூர், "அரியவான வழக்கு வென்ற பெருமாள் நல்லூர்" எனப்பெற்றது. மேற்கூறியன யாவும் இராசராசச் சம்புவராயனது கல்லெழுத்தொன்றால் அறியலாம்.[10] மூன்றும் குலோத்துங்கனது மூன்றும் ஆண்டுக் கல்வெட்டும்,[11] ஏழாம் ஆண்டுக் கல்வெட்டும்[12] இறைவனை ஆட்கொண்டதேவர் என்று சிறப்பிக்கின்றன.

'சொற்றமிழ் பாடுக' என்றார் தூமறை பாடும் வாயார்; 'யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்' என்றார் சுந்தரர்; 'முன்பெனைப் பித்தன் என்றமையின் பித்தன் என்றே பாடுக' என்றார் பரமனார். இதனை

10. தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், பாகம் I, சாஸனம் 85.

11. 477 of 1921.

நினைப்பிக்கிறது ஒரு கல்லெழுத்து. உதயன் ஸ்ரீ கயிலாய முடையான் என்ற ஒருவர் "பிச்சன் என்று பாடச் சொன்னான்" என்று பெயரிட்ட காளங்களை வழங்கிய தாகக் கோப்பெருஞ் சிங்கனது 27 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்லெழுத்து [12] நுவல்கிறது (431 of 1921).

வன்றொண்டர்

சுந்தரர் வன்மைகள் பேசியபின் **வன்றொண்டர்** எனப் பெற்றார். இவ்வன்றொண்டப் பெயர் பூண்டவர் திருநெல்வேலித் தெற்கில் மடத்துக் கீழை மடஸ்தானத்து இருந்தனர் என்று கோனேரின்மை கொண்டான் கல்லெழுத்தினின்றும்,[13] ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர் கல்லெழுத்தினின்றும் [14] அறிகிறோம்.

நங்கை பரவையார்

சுந்தரர், பரவையாரைத் திருவாரூரில் வாழ்க்கைத் துணையாகக்கொண்டார். நங்கை பரவையாரது திருவுருவ மும் நம்பியாரூரரது திருவுருவமும், தஞ்சை இராசராசேச் சரத்தில் எழுந்தருளுவிக்கப் பெற்றதென்று ஒரு கல் லெழுத்துக் கூறுகிறது.[15] நங்கை பரவையார்க்குத் திருவையாற்றுக் கோயிலில் விளக்கு எரிக்க நிலம் விடப் பெற்றிருந்த செய்தி "நங்கை பரவையார் திருவிளக்குச்

---

12. 310 of 1902; S. I. I. Vol. VII, No. 939.

13. S. I. I. Vol. V. No. 420.

14. S. I. I. Vol. V. No. 421.

15. விரிவைப் பொய்கை நாடுகிழவன் என்ற என் கட்டுரை நான் எழுதி வெளியிட்ட அரசியல் தலைவர்கள் என்ற நூலுட்காண்க.

செய்'' என்ற கல்லெழுத்துப் பகுதி[16] அறிவிக்கிறது. இரண்டாம் குலோத்துங்க சோழனது 7 ஆம் ஆட்சி ஆண்டுக்குரிய திருவாரூர்க் கல்வெட்டு, [17] திருவாரூர்க் கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற ஆளுடையநம்பி, பரவைநாச்சியார் படிவங்களுக்கு அநபாய நல்லூர் என்ற ஊர் அளிக்கப் பெற்றதாகக் கூறுகிறது. முதல் இராசேந்திரனது 20 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டினின்று[18] இராசேந்திரனது அணுக்கியார் பரவை நங்கையார் என்று இப்பரவையார் பெயரைப் பூண்டிருந்தனர் என்று அறிகிறோம்.

## திருத்தொண்டத்தொகை [19]

''ஈசன் அடியார் பெருமையினை எல்லாவுயிரும் தொழவெடுத்துத் தேசமுய்யத் திருத்தொண்டத்தொகை'' பாடினார் சுந்தரர். இப்பதிகம் பெரிய புராணத்துக்குப் பதிகமாக விளங்குவது. இது மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது என்று கல்லெழுத்துக்களினின்று அறிகிறோம். திருத்தொண்டத்தொகை நினைவாகத் திருவிடை வாயிலில் திருத்தொண்டத் தொகையான் குகை என்று ஒரு குகை இருந்ததென மூன்றும் இராசேந்திரனுடைய 4-ஆம் ஆட்சி ஆண்டு (கி. பி. 1250)க்குரிய கல்லெழுத்துக் கூறுகிறது.[20] இக்குகையுள் திருமுறைகள் வைக்கப்பட்டிருந்தன. திருச்சி மாவட்டம் கோவந்தபுத்தூரில்

---

16. S. I. I. Vol. V, No. 533.
17. S. I. I. Vol. VII, No. 485; 269 of 1901.
18. 680 of 1919.
19. குமரகுருபரன் திங்களிதழ்மலர் 7, இதழ்12, பக்கம் 715-720 காண்க. (என் இலக்கியக்கேணியும் காண்க.)
20. 10 of 1918.

மூன்றும் இராசேந்திர சோழனது 2ஆம் ஆண்டு (கி. பி. 1248)க்குரிய கல்லெழுத்து,[21] திருத்தொண்டத் தொகையான் திருமடம் என்று ஒரு மடத்தைக் குறித்துச் சில செய்திகளைச் சொல்லுகிறது. சிதம்பரம் நடராசப் பெருமான் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்தை யடுத்துத் "திருத்தொண்டத்தொகை யீச்சரம்" என்ற ஒரு திருக்கோயிலில் தொகையடியார்கள் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபடப் பெற்றனர் என அறிகிறோம். இவ்வாலயம் நவலிங்கம் கோயில் என இந்நாளில் வழங்குகிறது. இக்கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவமும் அமைக்கப் பெற்று இருந்தது எனக் கல்வெட்டுக்கள் புகல்கின்றன.[22] மூன்றாங் குலோத்துங்க சோழனது இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இத் திருக்கோயிலைக் குறிக்கிறது.[23] இனிச் சிதம்பரத்திலுள்ள இராசேந்திர சோழனது 24ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தொன்று தில்லையில் "திரு மாசித்திருநாளில் திருத்தொண்டத் தொகை விண்ணப்பஞ் செய்வார்க்குக் காசு ஐஞ்சு" நிபந்தமாக அளித்ததாகப் பகர்கின்றது.[24]

## பொன்னார் மேனியன்[25]

சுந்தரர் திருமழபாடியில் பாடியருளிய திருப்பதிகம் "பொன்னார் மேனியன்" என்ற தொடக்கமுடையது.

---

21. 192 of 1929.

22. சிதம்பரம்-தருமபுர ஆதீன வெளியீடு—பக்கம் 44.

23. 262 of 1913.

24. S. I. I. Vol. IV, No. 223; 118 of 1888.

25. குமரகுருபரன் திங்களிதழ் மலர் 8, இதழ் 7, பக்கம் 418-422 காண்க. (என் இலக்கியக் [illegible]யும் காண்க)

பொன்னார் மேனியன் என்ற தொடர் 11 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த ஒரு சேனுபதியின் மனத்தைக் கவர்ந்தது. அவர் சேனுபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன் அணிமுரி நாடாழ்வான் எனப் பெற்ருர். அவர் திருமழபாடிக் கோயிலில் செம்பு தராவால் பொன்னார் மேனியன் என்ற திருமேனியை எழுந்தருள்வித்து, அதற்கு நாள்வழிபாட்டிற்கு நிபந்தம் அளித்ததோடு சில அணிகலன்களையும் அளித்ததாக இரண்டாம் இராசேந்திரனுடைய கல்லெழுத்து உரைக்கின்றது.[26] இனி இச்சொற்றொடர் பொன்னார் மேனி பட்டர் என்று ஒரு பட்டர் பெயரில் அமைந்ததாகச் சுந்தரபாண்டியனது கல்லெழுத்து [27] உரைக்கின்றது. அன்றியும் மூன்றும் குலோத்துங்க சோழரது 34 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டினின்று[28] ஊரின் உட்பகுதியொன்று "பொன்னார் மேனி விளாகம்" என்று பெயரிடப் பெற்றிருந்ததாகக் கூறப் பெறுகிறோம்.

### கிழிபெற்றது

சுந்தரர் திருப்பாச்சிலாச்சிராமத்தில் பொற்கிழி பெற்ருர்; மூன்றும் இராசராசனது 27ஆம் ஆண்டுக் கல்லெழுத்தில், "கிழி கொடுத்தருளிய திருவாசல்" என்று ஒருவாசல் குறிக்கப் பெறுகிறது.

### உளோம்போகீர்

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து, பின்னர்த் திருவாரூர்க்கு வரப் புறப்பட்டார்; சூள் பொய்த்தமையின் இரு கண்களையும் இழந்தார்; கண்ணிழந்து

---

26. S. I. I. Vol. V, No, 644.
27. S. I. I. Vol. V, No. 649.
28. S. I. I. Vol. V, No. 632.

செல்பவர் திருவெண்பாக்கத்துக்கு வந்தார்; சிவ பெருமானை நோக்கிக் கண் வேண்டித் 'திருக்கோயிலில் உள்ளீரோ' என்று பாடினார். இறைவன் "உளோம் போகீர்" என்று கூறினார். இதனை நினைவு கூரும் நிலையில் திருவெண்பாக்கம் என்னும் திருத்தலத்துக்கு அண்மையில் திருவுளம்பூதூர் என்ற ஓரூர் உளோம் போகீர்புரம்[29] என்று அழைக்கப் பெற்றதெனச் சொல் லப்படுகின்றது.

### சேரமான் பெருமாள்

சேரமான் பெருமாளுயனார் சுந்தரருடைய உற்ற நண்பர். ஆகவே சுந்தரரைச் சேரமான் தோழர் எனல் பொருந்தும். ஸ்ரீ வீரபாண்டியதேவரது 3 ஆம் ஆண்டுக் கல்வெட்டில்[30] கையொப்பமிட்டவர் ஒருவர் சேரமான் தோழர் என்று இப் பெயரைப் பூண்டிருந்தார். ராஜ நாராயணச் சம்புவராயரது காஞ்சிபுரத்துக் கல்வெட்டு,[31] உடையார் ஏகாம்பரநாதர்க்குரிய திருத்தோப்புக்களில் ஒன்று சேரமான் பெருமாள் திருத்தோப்பு என்ற பெயரால் அமைந்திருந்ததென அறிவிக்கிறது.

### அவிநாசியில்

சுந்தரர் அவிநாசியில் நிகழ்த்திய அற்புதம் முதலை யுண்ட பாலனை அழைத்ததாகும். வீரபாண்டிய

---

29. பெரிய புராண விரிவுரை, C. K. சுப்பிரமணிய முதலியார்-ஏயர்கோன் கலிக்காமர் புராணம், திருவெண் பாக்கம், தலக்குறிப்பு.

30. S. I. I. Vol. V, No. 433.

31. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் எண், 345 604 of 1919.

தேவரது அவிநாசியில் உள்ள 14ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு[32] தென்பள்ளியிலிருந்த சுந்தர நாயனார்க்கு அமுது அளிப்பதற்காகப் பாப்பாரப் பூண்டியாகிய வீரராசேந்திர நல்லூர் அளிக்கப்பெற்ற தெனப் பகர் கின்றது. இக் கல்லெழுத்தில் கையொப்பமிட்டவர் களில் ஒருவர் தம்பிரான் தோழர் என்ற பெயருடையவர் என்று அறிகிறோம். தம்பிரான் தோழர் என்பது சுந்தரருடைய பெயர்களில் ஒன்று. தம்பிரான் தோழர் மானக் கஞ்சாறர் என்று ஒருவரைக் குறித்துத் திருமுட்டம் கோயிலில் உள்ள அவர் படிவத்தின்கீழ் உள்ள கல்லெழுத்தினின்றறியப் பெறுகின்றது.[33] இங் ஙனம் தம்பிரான் தோழர் என்ற சுந்தரத் திருப்பெயர் மக்கட் பெயராயமைந்து போற்றப் பெற்றமை அறிந்து இன்புறுவோமாக!

இனிச் சுந்தரபாண்டிய தேவரது 21 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று[34] திருப்புக் கொளி யூர்க் குளக்கரையில் சுந்தரர் திருமேனி அரசனால் எழுந்தருளுவிக்கப் பெற்றது என்றும், அதற்குப் பாண்டி மண்டலத்து வியாபாரி அழகிய பா... .யதேவர் நிபந்த மாக 220 வராகன் புள்ளிக் குளிகை . ளித்தார் என்றும் கூறுகிறது. குளக்கரையில் சுந். ர் . திருமேனியை எழுந்தருளச் செய்தமை முதலை யுண்ட பாலனை

---

32. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் எண் 191; 187 of 1909.

33. சாஸனத் தமிழ்க்கவி சரிதம்—பக்கம்-29.

34. தென்னிந்திய கோயிற் சாஸனங்கள், எண் 200; 181 of 1909.

அழைத்த அற்புதத்தை நினைவுகூர்தல் பொருட்டேயாம் என்பது ஊகித்தறிதற்பாற்று.

### ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம்

இரண்டாம் இராசாதி ராசனுடைய 9 ஆம் ஆட்சி யாண்டுக்குரிய திருவொற்றியூர்க் கல்லெழுத்து,[35] "இவ் வரசன் படம்பக்க நாயக தேவர் திருமகிழின் கீழ் திருவோ லக்கம் செய்தருளியிருந்து ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் கேட்டருளா நின்றுர்" என்று கூறுகிறது. மகிழமரத்தின் கீழ் சுந்தரருக்கும் சங்கிலியார்க்கும் திருமணம் நடந்த செய்தி இங்கு நினைவுக்கு வரும். மகிழின் கீழ் படிக்கப் பெற்ற ஸ்ரீபுராணம் பெரிய புராணமாதல் தகும் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர்.

### தாராசுரத்துச் சிற்பங்கள்

கும்பகோணத்துக்கு அண்மையிலுள்ள தாராசுரத் துக் கோயில் இரண்டாம் இராசராசனல் கட்டப்பெற்றது. இக்கோயில் இறையகத்துச் சுற்றியுள்ள பகுதியில் நாயன் மார் சரிதங்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. அச் சிற்பங்களின்மேல் அவ்வச் சிற்பத்தை விளக்கும் சொற் றெடர்கள் காணப்படுகின்றன. சுந்தரருடைய வரலாற் றைக் குறிக்கும் சொற்றெடர்கள் பின்வருமாறு[36]:—

1. உடையநம்பி எழுந்தருளுகிறுர் ;
2. ஆவணவோலை காட்டினபடி ;

---

35. S. I. I. Vol. V. No. 1358; K. A. N. Cholas Part II, P. 481. (ஞானசம்பந்தம், திங்களிதழும் காண்க.)

36. திருக்கோயிலில் வெளிவந்த 'தாராசுரத்து இராச ராசேச்சுரம்' என்ற என் கட்டுரை காண்க.

3. உடைய நம்பிக்கு ஓலை வென்றருளின படி ;[37]

4. ஏயர்கோன் கலிக்காமாண்டார் ;

5. உடைய நம்பி வேடர் வழிபறித்தபடி ;

6. திருமுருகன் பூண்டியில் பெற்றபடி ;

7. அவஞசியாண்டார் முதலைவாய்ப் பிள்ளை ;

8. சேரமான் பெருமாள் காதை.

## முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்ருன் சுந்தரர் வரலாறு தமிழ் மக்களால் பெரிதும் போற்றப் பெற்றமை தெள்ளிதின் விளங்கும். இங்ஙனமே இனியும் சைவ நன்னெறிப் படர்குவார் யாவரும் சுந்தரரது வரலாற்றைப் போற்றி யுய்க !

வாழி திருநாவலூர் வன்ருெண்டர் பதம் போற்றி !

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS

37. 'ஓலை வென்றருளினபடி' என்ற இடத்தில் 'ஓல் லென்றருளினபடி' என்றே பாடம் காணப் பெறுகிறது.

# திருவிரையாக்கலி*

## காப்புரைகள்

பழமையான கருங்கற் கோயில்களில் எல்லாம் சிலாசாஸனங்கள் இருத்தலைக் காண்கிறோம். அவை அக்கோயில் எடுப்பிக்கப்பெற்ற காலமுதற் கொண்டு ஆண்ட அரசர் முதலியவர்களுடைய கல்வெட்டுக்க ளாகும். அக்கல்வெட்டுக்களில் பல்வேறு அறச் செயல்கள் குறிக்கப்பட்டிருக்கும். அவ்வறங்களை நன்கு காக்க வேண்டும் என்று கல்வெட்டின் இறுதியில் காணப்பெறும் வாக்கியங்கள் பெரும்பாலும் காப்புரைகள் ஆக இருக் கும். சிவன் கோயிலாயின் ' பன் மாஹேசுவர ரக்ஷை ' என்றும், திருமால் கோயிலாயின் 'ஸ்ரீவைஷ்ணவ ரக்ஷை' என்றும் எழுதப்பட்டிருக்கும். ' பன் மாஹேசுவர ரக்ஷை ' என்றால் ' பல சிவனடியார்கள் காப்பாராகுக ' என்பது பொருள். இனி, அறம் வளர்க—அறம் மறவற்க ; அறமல்லது துணையில்லை—இதனை ரக்ஷித்தார் அடி என் முடிமேலன—இதை அழிப்பான் கங்கையிடைக் குமரி யிடைச் செய்தார் செய்த பாவம் கொள்வான்—கடிகை எழாயிருவரையும் கொன்ற பாவத்துப்படுவான்—அகிதம் பண்ணினவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போகக் கடவார்களாகவும்—என்று பற்பல காப்புரைகள் தரப்பட்டிருக்கும்.

## ஆணை

மேற்கண்டவாறு காப்புரைகள் காணப்பெறுதலோடு, தருமங்களை அழிக்காதவாறு காப்பதற்காக ஆணை மொழி

---

* திருக்கோயிலில் வெளிவந்தது.

களும் கல்வெட்டுக்களிற் காணப்பெறுகின்றன. மதுராந்தகத்துக் கல்வெட்டொன்றில் (262 of 1901; 477 of Vol. VII) 'மஹா சபையார் ஆணை திருவாணை' என்றுள்ளது. இரண்டாம் குலோத்துங்க சோழனது 12 ஆவது ஆட்சியாண்டுக்குரிய திருவதிகைக் கல்வெட்டில் 'திருவாணை, புவனமுழுதுடையார் ஆணை, திருவிரையாக்கலி' (45 of 1903; Vol. VIII, No. 319) என்றும், மூன்றும் குலோத்துங்க சோழனுடைய திருமாணிகுழிக் கல்வெட்டில் (157 of 1902; 782 of Vol. VII) 'இத்தன்மம் அழிப்பார் திருவாணை திருபுவனமுழுதுடையார் ஆணை திருவிரையாக்கலி' என்றும், முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில், திருமாணிகுழியில், திருமாணிகுழி மகாதேவர் திருமடைவிளாகத்து ஸ்ரீகாழி நாடுடைய பிள்ளை திருமடத்துக்கு நிலம் இறையிலி யாக்கிய சாஸனத்தில் (160 of 1902) "விரோதம் புகுதில் விரோதம் செய்தாரை ஸ்ரீயாஞ்ஞை திருவாணை மறுத்தாரைச் செய்வது செய்து இத்தன்மத்துக்கு விரோதம் வராமல் காத்துச் செலுத்தக் கடவோமாகவும்; திருவிரையாக்கலி மறுத்தாரைத் தேவர் அடியாராயுள்ள ஆண்டார்களே தண்டித்துத் திருவிரையாக்கலி நிலை நிறுத்தக்கடவார்களாகவும்; திருவாணை மறுத்தாரை நகரத்தோமே தண்டித்துச் சந்திராதித்தவரை நிலை நிறுத்தக் கடவோமாகவும்" என்றும் காணப்பெறுகின்றன. இவற்றால் திருவாணை திருவிரையாக்கலி என்பன ஆணைகள் என்றும், ஸ்ரீயாஞ்ஞை என்பதும் திருவாணை என்பதும் ஒன்று என்றும் அறியலாம். இவ்வாணைகளை மறுத்தால் என்ன தண்டனை என்பது தெரியவில்லை. ஆனால் திருவிரையாக்கலி மறுத்தாரைத் தண்டிக்கும் உரிமை தேவர் அடியார்கள் (ஸ்ரீமாஹேஸ்வரர்கள்) ஆகிய

ஆண்டார்களுக்கு என்றும், திருவாணை மறுத்தாரைத் தண்டிக்கும் உரிமை நகரத்தார்களுக்கு என்றும் இத் திருமாணிகுழிக் கல்லெழுத்துப் பகர்கின்றது. இனி இவற்றின் வேருக மஹா சபையார் ஆணை என்றென்றுண்டு என்பது மதுராந்தகக் கல்லெழுத்தால் அறியலாம்.

## திருவிரையாக்கலி

மேலே கண்ட ஆணைகளில் **திருவிரையாக்கலி** குறித்து 11 ஆம் திருமுறையிலேயும் 12 ஆம் திருமுறையிலேயும் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.

**11 ஆம் திருமுறை:** பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த பிரபந்தங்களில் ஒன்று **கோயில் நான்மணிமாலை.** இதில் நான்காவது பாடலில் சிவபெருமானுக்குரிய தசாங் கங்களைக் கூறுகையில் ' திருவிரையாக்கலி ' குறிப்பிடப் பட்டுள்ளது. அப் பாடற்பகுதி பின்வருமாறு :—

" தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்
தழங்குந் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்நீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல், தில்லை யாகிய தொல்பெரும் பதியுமென்
றெருபதி ஞயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடி."

இதில் சிவபெருமானுக்குரிய ஆணையாகத் திருவிரை யாக்கலி என்பது காணப்பெறுகின்றது.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய **திருத்தொண்டர் திருவந்தாதி** 68 ஆம் செய்யுள் கோட்புலி நாயனாரைப் பற்றியது. அது வருமாறு :—

" பெற்ற முயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்ற மறுக்குந் தொழிற்றிரு நாட்டியத் தான்குடிக்கோன்
குற்ற மறுக்குநங் கோட்புலி நாவற் குரிசிலருள்
பெற்ற வருட்கட லென்றுல கேத்தும் பெருந்தகையே."

இதினின்றும் திருவிரையாக்கலி என்பது சிவபெருமான் ஆணை என்பது போதரும்.

**நாதன்றன் வல்லாணை (12 ஆம் திருமுறை)**

திருவிரையாக்கலி என்னும் ஆணையிட்டவர் கோட்புலி நாயனார். இவர் சோழநாட்டில் திருநாட்டியத்தான் குடி என்னும் ஊரவர். இவர் ஒரு பெருவீரர்; சிவபெருமான் கோயில்கடோறும் அமுதுபடி பெருகச் செய்யும் கடப்பாடு கொண்டவர் ; அதற்கென நிறைய நெல் சேமித்து வைப்பவர். ஒருகால் வேந்தனேவலால் இவர் போர்மேற் செல்ல வேண்டியதாயிற்று ; செல்லுங்கால் தமராயினாரைத் தனித்தனியே விளித்து,

' எந்தையார்க் கமுதுபடிக் கேற்றியநெல் இவை அழிக்கச்
சிந்தையாற் றனினைவார் திருவிரையாக் கலி'என்று

ஆணையிட்டு அகன்றார். இவர் போர் மேற் சென்றபின் கடும்வற்கடம் வந்தது ; கோட்புலியாரின் உறவாவார் யாவரும் பசியால் நலிவுற்றனர் ; " இறைவற்குரிய நெல் லிது ; தொடற்க ; திருவிரையாக்கலி " என்று கோட்

புலியார் சொல்லிச் சென்றிருப்பினும் பசிக் கொடுமையால், "இறைவன் அமுதுபடியைக் கொள்வது பிழைதான்; எனினும் பின்னர் ஈடுசெய்வோம்" என்று நினைத்து அந்நெல்லை எடுத்து உண்டனர். சின்னாள் பின்னர்க் கோட்புலியாரும் திரும்பினார்; நிகழ்ந்ததைக் கேட்டறிந்தார்; யாவர்க்கும் ஆடை யணிகலன்களை அளிப்பார்போலே யாவரையும் வரவழைத்தார்; எல்லோரும் வந்ததும், "நாதன்றன் வல்லாணை மறுத்து அமுதுபடி அழித்த மறக்கிளையைக் கொல்லுவேன்" என்று கூறி ஒவ்வொருவரையும் கொன்றார். இதுவே (12 ஆம் திருமுறை) பெரியபுராணத்தில் வந்த வரலாறு.

## திருவிரையாக்கலி மறுப்பின்

ஆணைகளை மறுப்பின் என்ன தண்டனை என்று கல்வெட்டினின்று தெரியவில்லை. ஆனால் கோட்புலி நாயனார் புராணத்தில் திருவிரையாக்கலி மறுத்தல் சிவாபராதம் என்றும் திருவிரையாக்கலி மறுத்தார்க்குரிய தண்டனை, மறுத்தாரைக் கொல்லுதலே என்றும் தெரிய வருகிறது.

## திருவிரையாக்கலிப் பெருந்தெரு

விரையாக்கலி எனும் ஆணையின் பெயரால் ஒரு பெருந் தெரு இருந்ததாகத் திரும்புறம்பயக் கல்வெட்டினால் அறிய வருகிறது. முதலாம் இராசேந்திரனின் 16 ஆவது ஆட்சியாண்டில் திருப்புறம்பயத்தில் சந்தி விளக்கு சிறுகாலை ஐந்தும், உச்சிப்பொழுது ஐந்தும் வைக்க 50 காசு நெற்குப்பையுடையான் வெண்காடன் என்பான் அளித்தனன். இதைக் கொண்டு நிசதம் உழக்கு எண்ணெய் கொடுப்பதாக அத்தேவர் தேவ

தானம் பிரம்பில் விரையாக் கலிப்பெருந் தெருவில் வாழ்ந்த சங்கரப்பாடியார் ஏற்றுக் கொண்டனர் (80 of 1897; Vol. VI, No. 30). எனவே விரையாக்கலி ஒரு தெருவின் பெயராக அமைந்தது என்பது தெளிவு.

தொகுப்புரை

எனவே ஆணைகள் 'திருவாணை திருவிரையாக்கலி' என்பன என்றும், திருவிரையாக்கலி என்பது இறைவன் ஆணை என்றும், கோயில்களானல் தேவர் அடியார் களாகிய ஆண்டார்களே திருவிரையாக்கலி மறுத்தாரைத் தண்டிப்பர் என்றும், இவ்வாணை மறுத்தார்க்குக் கொலைத் தண்டனையே தீர்வு என்றும் கண்டோம்.

# ஆரம்பூண்டான் *

## திருவானைக்கா

திருவானைக்கா, திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் அருளிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் திருப்பதிகம் அருளப் பெற்ற சிறப்பினை யுடையது; ஐம்பூதங்களுள் அப்புத்தலமாக விளங்குவது; யானை பூசித்துப் பேறு பெற்றமையால் திருவானைக்கா என்றும், இறைவன் வெண்ணாவல் (ஜம்பு) மரத்தின்கீழ் எழுந்தருளி யுள்ளமையால் ஜம்புகேசுவரம் என்றும், இறைவி தவஞ்செய்து ஞானோபதேசம் பெற்றமையால் ஞானத் தலம் என்றும் பெயர்களை யுடையது; காவிரி, இந்திர தீர்த்தம், சந்திர தீர்த்தம் முதலிய தீர்த்தங்களையுடையது; முற்பிறப்பில் சிலந்தியாயிருந்து வழிபட்ட புண்ணியப் பலனால் அரசனாகப் பிறந்த கோச்செங்கட் சோழர் கட்டிய கற்றளிகளையுடையது; ஐந்து மதில்களுள், இறைவர் சித்தராய் எழுந்தருளித் திருநீற்றைக் கூலியாகக் கொடுத்து எடுப்பித்த காரணத்தால் திருநீற்றுமதில் எனும் பெயர்கொண்ட மதிலையுடையது; இறைவர் நீர்த்திரளில் எழுந்தருளியுள்ளமையால் நீர்த்திரள் நாதர் என்றும் வழங்கப் பெறுகிறார். பரமன் ஆரம்பூண்ட அற்புதம் இத்தலத்தில் நிகழ்ந்தது.

## ஆரம்பூண்டான்

உறையூரின்கண் இருந்து ஆண்ட சோழவரசர் ஒருவர் மணியாரம் அணிந்துகொண்டபடியே காவிரியில்

---

* திருக்கோயிலில் வெளி வந்தது.

நீராடினர் ; மணியாரம் காவிரி நீரில் தவறி வீழ்ந்தது. அரசர், 'சிவபெருமானே ! இம்மணியாரத்தைக் கொண்டருளும்' என்று வேண்டினர். உடனே அம்மணியாரம் திருமஞ்சனக் குடத்துள்ளே புகுந்தது ; திருவானைக்கா எம்பெருமாற்குத் திருமஞ்சனம் ஆட்டியபொழுது அந்த ஆரம் சிவபெருமான் திருக்கழுத்தில் விழுந்து அணி செய்தது. இங்ஙனம் சிவபெருமான் திருவானைக்காவில் ஆரம்பூண்டவராயினர். இவ்வற்புதத்தைச் சம்பந்தர்,

" பாரும் விண்ணும் கைதொழப் பாயுங் கங்கை செஞ்சடை
ஆர நீரோ டேந்தினன் ஆனைக் காவு சேர்மினே "

என்று குறித்துள்ளார். சுந்தரர் இதனைச் சிறிது விரிவாகவே பின்வருமாறு பாடியுள்ளார் :—

தார மாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்தும்
நீரில் நின்றடி போற்றி நின்மல கொள்என ஆங்கே
ஆரம் கொண்டஎம் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே.

இங்ஙனம் ஆரம்கொண்டமையின் இத்தலத்துச் சுவாமிக்கு 'ஆரங்கொண்ட பெருமான்' என்ற பெயர் வழங்கலாயிற்று என்றறிகிறோம்.

ஆரம்பூண்டான் என்ற பெயரைத் திருவானைக்காவில் இடைக்காலத்துத் தமிழ்ப் பெருமக்கள் இயற்பெயராகவோ சிறப்புப் பெயராகவோ தரித்திருந்தனர். 'ஆரம்பூண்டான்' என்பது மேலே சம்பந்தரும் சுந்தரரும் குறித்த அற்புதச்செயலையே நினைப்பூட்டுகிறது; ஆகலின் இவ்வரலாற்றைக் குறிப்பதாகவே இப்பெயர் அமைந்தது எனக் கோடல் பொருந்தும். திருவானைக்காவில் காணப்பெறும் கல்லெழுத்துக்களில் மூன்றனுள் இப்பெயர் காணப்பெறுகிறது.

கல்லெழுத்துக்களில்

"தேர்போல்" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி, பாண்டிய அரசருள் ஒருவராகிய குலசேகரபாண்டிய னுடையதாகும். குலசேகரபாண்டியன் கி.பி. 1268 முதல் கி. பி. 1311 வரையில் அரசாண்டவன்; இவ்வரசன் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரின் மகனுவன். இவனும் 'எம்மண்டலமும் கொண் டருளிய' என்ற சிறப்புப் பெயர் பூண்டவன். இவனது 10 ஆவது ஆட்சியாண்டுக் கல்லெழுத்துத் திருவானைக் காவில் உள்ளது. இக்கல்வெட்டு[1] ஒரு நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டு. இதில் கையொப்பமிட்டவர் களுள் ஒருவன், "கோயில் கணக்கு சிற்ருமூர் உடையார் ஆரம்பூண்டான் திருவானைக்காப்பிரியன்" என்பவன் ஆவன்.

ஷை கோயிலில் போசள வீரராமநாதனது கல்வெட் டொன்று[2] காணப்பெறுகின்றது. வீரராமநாதன், எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியனுக்குக் கப்பஞ்செலுத்திக்கொண்டு சோணுட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தவனுவான்.[3] இக்கல்வெட்டும் ஒரு நில விலைப்பிரமாண இசைவுத் தீட்டு. இதில் கையொப்பம் இட்டவர்களுள் ஒருவன், "கோயிற் கணக்கு சிற்றம்ப ருடையாரான ஆரம்பூண்டான் திருவானைக்காப்பிரியன்" என்பவனுவன்.

---

1. S. I. I. Vol IV No. 426; A. R. No. 25 of 1891.
2. S. I. I. Vol IV. No. 427; A. R. No. 26 of 1891.
3. திரு, ச. பண்டாரத்தார் - பாண்டியர் வரலாறு, பக்கம் 131.

மூன்றும் இராசராசசோழன் 1216 முதல் 1246 வரை அரசாண்ட சோழவரசனுவன். இவனது 22 ஆம் ஆட்சியாண்டுக்கல்வெட்டொன்றும்[4] நிலவிலைப் பிரமாண இசைவுத் தீட்டுஆகும். நிலத்தை விற்றவர்களுள் ஒருவன் ஆரம்பூண்டான் என்ற பெயரை யுடையவன். இவன் கூத்தன் குன்றனுன கிழாற்றூர் அரையனுக்குத் தம்பி யாவன்; இவனுடைய தம்பியின் பெயர் தாழி என்பது; ஆரம்பூண்டானும் தாழியும் சயினை[5] ஆயினமைக்கு, இராசேந்திர சோழ மங்கலத்துக் காவற்காணியுடைய பெருமாள் அழகனுன மணவாள முத்தரையன், இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளான்.

முடிப்புரை

எனவே சமய குரவர்களால் குறிக்கப் பெற்ற தாகிய 'இறைவன் ஆரம் பூண்ட வரலாறு' சமயத் தொண்டு புரிந்தவர்களும் பொது மக்களும் தம் பெய ராகப் பூண்டு அவ்வற்புதச் செயலை நினைவுகூர்ந்து போற்றினுர்கள் என்று அறிகிறோம். இதனுனும் சோழர் காலத்துத் தமிழ்ப் பெருமக்கள் சிவசரிதங்களுள் ஈடு பாடு உடையராயிருந்தமை நன்கு விளங்கும். இனி ஷெ கல்லெழுத்துக்களில் தேனுருங் கொன்றையன், என் னுனைக் கன்று பட்டன், ஆதிச்செல்வன் பண்டாரம், நல்ல நாம முடையான், சிலந்தியைச் சோழனுக்கினுன் திருத்தோப்பு முதலிய பெயர்கள் காணப் பெறுகின்றமை அறிந்து இன்புறற பாலனவாம்.

---

4. S.I.I. Vol. VIII No. 340; A. R. No. 65 of 1903.

5. சயினை - கையெழுத்திடத் தெரியாதவர் என்று பொருள்படும் போலும்.

# தவப்பெருந் தேவு செய்தார்*

அன்ருெருநாள்

ஏழாம் நூற்றுண்டின் இடைப்பகுதி—திருச்சாய்க் காடு - திருச்சாய்க்காடிணிதுறையுஞ் செல்வர் திருக் கோயிலில் - பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள் - ஈர அன்பினர் யாதும் குறைவிலார் - கைத்திருத் தொண்டு செய் கடப்பாட்டினுர் - பாரம் ஈசன் பணியலதொன்றிலார் பலர் குழுமினர்; நிரந்த நீற்ருெளியால் நிறை தூய்மை யால், அஞ்செழுத்து ஓசை பொலிதலால் பாற்கடல் போன்ற காட்சி! ஞானத் தவமுனிவர் திருநாவுக்கரசர் எழுந்தருளுகிருர் – நாவார நம்பனையே பாடப் பெற்ருேம் என்ற பெருமித நடை - கந்தைமிகையாம் கருத்து - கையுழ வாரப் படை - வடிவிற்பொலி திருநீற்றுத் தோற்றம் - ஹர ஹர முழக்கம் - யாவரும் பூமழை பொழிகின்றனர்-நாவரசர் பாமழை பொழிகிருர்! ஒருபாடல் - கண்ணப்பருடைய தொண்டு:

"குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை
இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித் தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர ஒருகணை இடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவி ஞரே."

பின்ஞெருநாள்

பதின்மூன்ரும் நூற்றுண்டின் இடைப்பகுதி - திருச் சாய்க்காடு - திருக்காளத்தி ஆண்டார் என்ற ஒரு மெய்

---

* திருவாரூர் மகாகும்பாபிஷேக மலரில் வெளிவந்தது.

யன்பர் - திருமுறைகள் பாடியும் கேட்டும் மகிழ்பவர் - முத் திறத்தார் ஈசன் முதல் திறத்தைப் பாடிய திருநெறிய தெய்வத் தமிழைப் பாடுகிறுர், ஒரு அன்பர்.

"தவப்பெருந் தடக்கை வேடன்......"

இத்திருநேரிசையைத் திருக்காளத்தி ஆண்டார் பரவசமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் - திடீரெனக் குதித் தெழுந்தார் - தவப்பெருந் தேவு செய்தார் தவப்பெருந் தேவு செய்தார் என்று பலமுறை கூறினுர் – மகிழ்ந்தார்- திருக்கோயில் வழிபாடு முடித்துக் கொண்டார்-தன் இல்லம் அடைந்தார்.

மறு ஆண்டு

இறைவன் திருவருளால் திருக்காளத்தி ஆண்டார்க்கு ஒரு ஆண்மகவு பிறந்தது; ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்ருேர் பலர் குழுமினர். அவ்வாண் மகவுக்குத் தவப்பெருந் தேவு செய்தார் என்று பெய ரிட்டனர். திருக்காளத்தி ஆண்டார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அக்குழந்தை சிவக்கொழுந் தென வளர்ந்தது.

சில ஆண்டுகட்குப்பின்

கண்ணப்பரைத் தவப்பெருந் தேவு செய்த பெம் மாணுகிய காளத்தி நாதரைக் கண்டு கும்பிடத் திருக் காளத்திக்குச் சென்ருர், காளத்தி ஆண்டார்; சென்றவர் அங்கேயே தங்கினுர் - சிவத்தொண்டு பூண்டு 'பூணி யாய்ப் பணிசெய்' என்றவாறு பணிசெய்து வரலாயினுர். 'தவப்பெருந் தேவு செய்தாரும்' திருக்காளத்தியில் திருக்கோயில் அலுவல் செய்துவரலானுர்.

சகர யாண்டு 1242

திருக்காளத்தி-திருமணிக் கெங்கையுடைய நாயனர் கோயில் - திருமணிக் கெங்கைச் சீயன் என்ற அதிகாரி அவ்வூரிலுள்ள சில நிலங்களின் உரிமைகளை மாற்றி யமைக்கிருர் - இந்தச் சாசனத்தில் (A. R. No. 198 of 1903) பலரும் கையொப்ப மிடுகிருர்கள். அவர்களுள் ஒருவர், திருக்காளத்தி ஆண்டார் தவப்பெருந் தேவு செய்தார். இதே நாளில் இன்னொரு தரும சாசனமும் எழுதப்பெறுகின்றது. திருக்காளத்தி - திருமணிக் கெங்கை யுடைய நயனர் கோயில் வடக்குத் திருவீதி-தெற்கடையப் பாதியில் தவப்பெருந் தேவு செய்தார்க்கு உரிய நிலம் - பணம் நாற்பத் தொன்பதுக்கு விலைக்குக் கொண்டது - இன்னும் சில நிலங்களையும் திருநாமத்துக் காணியாகத் திருமணிக் கெங்கைச் சீயனர் விலைக்குக் கொண்டார் (A. R. No. 199 of 1903).

முடிப்புரை

எனவே, திருநாவுக்கரசர் திருச்சாய்க்காட்டுத் திரு நேரிசையில் திருக்கண்ணப்பர் வரலாற்றைப் பாட, அதிற்கண்ட தவப்பெருந் தேவு செய்தார் என்ற சொற்ருெடரை ஒரு அன்பர் தன் மகற்கு இட்டார் என்றும், இப்பெயர் 14ஆம் நூற்ருண்டில் திருக்காளத்தித் திருக்கோயில் சாசனங்களில் காணப்படுகின்றன என்றும், திருமுறைச் சொற்ருெடர்களை மக்கட்கு இடும் பழக்கம் முன்னுளில் மிக்கிருந்தமைக்கு இதுவும் ஒரு சான்ருகும் என்றும், சைவராவார் இந்த முறையை மீண்டும் வழக்காருக் கொள்ளுதல் தகும் என்றும் அறியலாம்.

# திருவெம்பாவை விளக்கம்

## தோற்றுவாய்

திருவெம்பாவை என்பது மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப் பெற்றது; திருவாசகத்தில் கண்ட ஐம்பத்தொரு பகுதிகளில் ஏழாவதாக அமைந்துள்ளது; இருபது திருப்பாடல்களைக் கொண்டது. இதனைத் திருவண்ணாமலையில் மாணிக்கவாசகர் அருளிச் செய்தா ரென்று திருவாதவூரர் புராணம்-திருவம்பலச் சருக்கத்தில் கூறப் பெற்றுள்ளது. மார்கழித் திங்களில் பெண்கள் யாவரும் ஒருங்கு கூடி, ஆதிரை நாளைக்குமுன் பத்து நாட்களும் விடியற்காலையில் நீராடுவதையும், அங்ஙனம் அவர்கள் நீராடற்குச் செல்லும் இயல்பையும், பிறவற்றையும் ஒருவர் மற்றொருவரிடத்தில் கூறுமுகத்தான் இந்நூற் பாடல்கள் அமைந்துள்ளன. இச்செய்திகளைப் பின்வரும் திருவாதவூரர் புராணம் கூறும்:—

" மாதர்கொண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்னீ ரைந்தே ஆகிய தினங்கள் எல்லாம்
மேதகு மனைகள் தோறும் அழைத்திருள் விடிவ தான
போதிருள் தம்மில் கூடிப் புனற்றட மாடல் செய்தார்."

(தி. பு. 40)

" அன்னவர் இயல்பு கண்டார் ஆங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசிப் பின்னர்க்
கன்னியர் பாடி யாடும் கவின்கொளம் மனைகண் டன்னார்
பன்னிய பாட லாக அம்மனை பாடல் செய்தார்."

(தி. பு. 41)

திருவெம்பாவை உள்ளக் கிடக்கை

பழைய திருப்பெருந்துறைப் புராணத்தில் திருவாசகச் சிறப்புரைத்த அத்யாயத்தில் திருவெம்பாவையின் கருத்துப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:—

"மலவிருளுற்று உறங்காமல் மன்னுபரி பாகரருட்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை."

திருவெம்பாவைப் பதிப்புக்களில் 'சக்தியை வியந்தது' என்ற குறிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது; அச்சக்திகள் தாமும் ஒன்பது என்ப. சென்னை அரசியலார் வெளியிட்ட 'திருவாசக வியாக்கியானம்' என்ற உரை 'சீகாழித் தாண்டவராயர்' என்பவராலே எழுதப் பெற்றது. அதில் திருவெம்பாவைக் கருத்தாக 'அகத்தியச் சூத்திரம்' என்ற பெயரில் பின்வருமாறு உள்ளது:—

"திருவெம் பாவையார் தசசத் திகளையும்
மருவி வியந்து வாய்மொழி பகர்ந்தது"

என்பது அது. பிறரெல்லாம் நவசக்திகளையே[1] கூறத் திருவாசக வியாக்கியானம் மட்டும் தச சக்திகளைக்[2] கூறுகிறது.

---

1. நவசக்தி—மனோன்மணி, சர்வபூத தமனி, பலப் பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை.

2. தசசக்தி—பராசக்தி, ஞானசக்தி, இச்சா, கிரியா, ஆதி, திருவருளின்பச் சக்தி, தெருள், அருள், இன்பான சிவசக்தி, இன்பாதீத சிவசக்தி.

## நுதலிய பொருள்

திருவெம்பாவை முதல் எட்டுப் பாடல்களில் பெண்கள் விடியற்காலையில் எழுந்து ஒவ்வொரு வீடாகச் சென்று, உறங்கும் தம்மோடொத்த பெண்களை எழுப்பிச் சிவபெருமானுடைய பெருமையைப் பாடிக் கொண்டே வருவதாகக் காணப்படுகிறது. இதில் இறைவனைப் பாடுதலும், அவனுடைய பொற்பாதத்தை ஏத்துதலும், அவன் பாதத்திறம் பாடி ஆடுதலும் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. திருப்பாவையில் கூறப்பட்டுள்ளது போலப் பாவை நோன்பு கூறப்பட்டதாகத் தெரியவில்லை. மார்கழித் திங்களில் திருவாதிரைக்கு முன் பத்து நாட்கள் சிவபெருமானைப் பாடிப் பூம்புனல் பாய்ந்து ஆடுதலே திருவெம்பாவையில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. திருவெம்பாவையில் காணப்படும் உயிர்நாடி ஆகிய மற்றொரு செய்தி கவனிக்கத் தக்கது.

" உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் " (செ. 9);

'எங்கள் பெருமான் உனக்கொன்(று) உரைப்போம் கேள் !
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க !
எங்கை உனக்கல்லா(து) எப்பணியும் செய்யற்க !
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க !'' (செ. 19)

என்ற பாடற் பகுதிகள் கூர்ந்து கவனிக்கற் பாலனவாம். இப்பகுதிகளில், சைவசமயப் பற்று உடையவராக வாழ்தல் வேண்டும் என்பது அழுத்தமாகச் சொல்லப்

பட்டுள்ளது. " திருநீறு இடா உருத்தீண்டேன் என்னும்" என்ற சுந்தரர் வாக்குக்கு இணங்கச் சிவபெருமானிடத்தில் பற்று, வழிபாடு முதலிய பண்பு உடையவர்களையே திருமணம் செய்துகொள்வோம் என்ற உறுதி திருவெம்பாவைப் பெண்கள் மாட்டு இருத்தலைக் கவனித்தல் வேண்டும். அன்றியும் காரைக்காலம்மையார் போன்று அடியார் வணக்கமும் அன்பர் பூசையும் வாழ்க்கைக் குறிக்கோளாக் கோடல் வேண்டும் என்று அப்பெண்கள் வாயிலாக மாணிக்கவாசகர் வற்புறுத்தி இருக்கிறார். 16 ஆவது பாட்டில் நாட்டு நலத்தின் பொருட்டு மழை பெய்தல் வேண்டுமென்று வேண்டிக் கோடலும் கூறப் பட்டுள்ளது. திருவெம்பாவை இருபது பாடல்களிலேயும் 'சிவபரத்துவமே' வற்புறுத்தப் பெற்றுள்ளது.

" ஆதியும் அந்தமு மில்லா அரும்பெரும் சோதி"
" மாலறியா நான்முகனும் காணாமலை "
" முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள் "
" காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி "
" விண்ணாகி மண்ணாகி இத்துணையும் வேறாகி "

என்ற திருவெம்பாவைப் பகுதிகள் சிவ பரத்துவத்தைத் தெள்ளிதின் விளக்கும். சிவபெருமானே ஐந்தொழிலையும் செய்பவர் என்பது "போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்" என்ற இறுதிப்பாடல் விளக்கும்.

### திருவெம்பாவை ஓதுதல்

மார்கழித் திங்களில் திருமுறைகளை ஓதும் மரபில்லை; திருவெம்பாவை மட்டும் ஓதுவது மரபாக வந்துள்ளது. இங்ஙனம் மார்கழித் திங்களில் மார்கழித் திருவிழாவில்

திருவெம்பாவை விண்ணப்பிக்கும் பழக்கம் தொன்று தொட்டே வந்துள்ளதாக அறிய வருகிறது.

திருவொற்றியூரில்

வீரராசேந்திர சோழன் கி. பி. 1063 முதல் 1070 வரை அரசாண்ட சோழவரசன் ஆவன். அவன் காலத்தில் தொண்டை நாட்டில் மணலியாகிய சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் தரிசாகக் கிடந்த 60 வேலி நிலம் செவ்வன் திருத்தி யமைக்கப் பெற்றது; 'வீரராசேந்திர வளாகம்' என்ற புதிய பெயரும் கொடுக்கப் பெற்றது. அந்நிலத்தின் வருமானத்தைக் கொண்டு வீரராசேந்திர தேவரின் ஆயுள் நீடித்தற் பொருட்டும், அன்னோர் குழந்தைகளின் உடல்நலத்தின் பொருட்டும் திருவொற்றியூர்க் கோவிலில் பல அறங்கள் நிகழ்த்த வழிவகை செய்யப் பெற்றது. ஓர் இசைவல்லார் திருப்பள்ளி எழுச்சி பாடுதல் வேண்டும்; திருவாதிரைத் திருநாள் விழா நடத்த வேண்டும்; அப்பொழுது திருவெம்பாவை ஓதுதல் வேண்டும்; பாடலும் ஆடலும் வல்ல இருபத்திரண்டு தளியிலாருக்கு ஊதியம் தரவேண்டும்; ஓர் ஆடல் ஆசிரியனையும் நியமிக்க வேண்டும்; திருப்பதியம் அகமார்க்கத்தில் பாடும் பதினறு தேவரடியார்க்கு ஊதியம் தருதல் வேண்டும் (128 of 1912; A. R. E. 1913, Para 32)—என்பன அவ்வறங்களாகும்.

சகர யாண்டு 1293 இல் கம்பண உடையார் உத்தரவின்படி துணையிருந்த தம்பி கொங்கராயருடைய தலைமையில் பதியிலார், ரிஷபத்தளியிலார், தேவரடியார் முதலியோர்க்குள் மனவேற்றுமை தீர்ப்பதற்குக் கூட்டம்

கூடியது. அதில் வழங்கிய தீர்ப்புக்களில் ஒன்று, பதியிலார்களே திருப்பதிகமும் திருவெம்பாவையும் விண்ணப்பிக்க வேண்டுமென்பதாகும் (A. R. E. 1913, Para 51).

எனவே மேலே குறித்த இரு திருவொற்றியூர்க் கல்வெட்டுக்களிலிருந்து தொண்டை நாட்டில் திருவெம்பாவை பாடுதலும், திருவாதிரைத் திருநாள் விழா நடத்துதலும் 11 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தன என்று அறியலாம்.

கீழூரில்

திருக்கோவலூரில் சிவன் கோவில் உள்ள பகுதி கீழூர் என்று வழங்கப்பெறும். அங்கு இரண்டாம் இராசேந்திர சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டு (கி.பி. 1056)க்கு உரிய கல்வெட்டு உள்ளது (12 of 1905). புதுப்பேரூர் என்னும் ஊரின் அவையினர் திருக்கோவலூர்க் கோவிலுக்குச் சிறிது நிலத்தை விற்று இறையிலியாக்கிக் கொடுத்தனர். மார்கழித் திருவாதிரை விழாவில் திருவெம்பாவை ஓதுவதற்கும், குறிப்பிட்ட சிலருக்குப் பிரசாதம் வழங்குவதற்கும், இந்நில வருவாய் பயன்படுத்தப் பெற்றது. இதனால் நடுநாட்டில் முன்னாளில் திருவெம்பாவை ஓதப்பெற்று வந்தது என்று அறியலாம்.

வழுவூரில்

வழுவூர் என்பது பாடல்பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. இவ்வூர் வீரட்டானேசுவரர் கோவிலில் இரண்டாம் இராசாதிராசனுடைய 5. ஆம்

ஆட்சியாண்டு (கி. பி. 1175)க் குரிய ஒரு கல்வெட்டு இருக்கிறது (421 of 1912; ARE 1913 Para 37.) ஒருவர் கோவிலுக்கு முப்பதுகாசு முதற்பொருள் கொடுத்தார் ; அதற்கு ஆண்டொன்றுக்கு $11\frac{1}{4}$ காசு வட்டியாகும். அவ்வட்டியைக் கொண்டு வழுவூரில் எழுந்தருளுவிக்கப் பெற்ற திருவாதவூராளிநாயனுர் திருவுருவத்தின் முன்பு மார்கழித் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓத வேண்டு மென்றும், பங்குனித் திருநாட் செலவு செய்ய வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதனுல் மார்கழித் திருநாளில் மாணிக்கவாசகர் திருமுன்னிலையில் திருவெம்பாவை ஓதுதலாகிய மரபு 12 ஆம் நூற்றுண்டிலேயே வழக்கில் இருந்தது என்பது தெளிவாகத் தெரியவருகிறது. இதனுல் திருவெம்பாவை ஓதும் வழக்கம் சோழநாட்டில் இருந்தமையும் தெளிவு.

நாங்குனேரியில்

நாங்குனேரி என்பது திருநெல்வேலிக்குத் தெற்கே 20 மைலில் உள்ள ஒரு வைணவத்தலம். வானமாமலைப் பெருமாள், திருவேங்கடமுடையான் ஆகிய இரு வைணவக் கோவில்களும், திருநாகேசுவரம் என்னும் ஒரு சிவன் கோவிலும் அவ்வூரில் உள்ளன. அவ்வூர், திருவாய் மொழியில் 'சிரீவர மங்கல நகர்' என்று குறிக்கப் பட்டுள்ளது ; ஸ்ரீவல்லப பாண்டியன் காலத்தில் 'நாங்குனேரியான அபயாஸ்ரய சதுர்வேதி மங்கலம்' என்றும் (260 of 1927-28), பின்னர் 'சீவர மங்கைச் சதுர்வேதி மங்கலம்' என்றும் (259 of 1927 - 28) கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளது. அவ்வூரில் திருநாகேசுவரர் கோவில் இறையகத்தின் வடக்குச்

சுவரில் சோழுடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய னுடைய 14 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (265 of 1927 - 28) திருவெம்பாவை விண்ணப்பித்தலைக் குறித்து அறிவிக்கிறது. இக்கல்வெட்டில் இவ்வூர் 'அபயாஸ்ரயச் சதுர்வேதி மங்கலம்' என்றும், பாச்சாற்றுப் போக்கி லுள்ள ஒரு பிரமதேயம் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. மேற்குறித்த மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் 'மருவாய்க் குறிச்சியான நரலோக வீரநல்லூரில் ஒரு விற்படை இருந்தது. அதற்கு இரண சிங்க வீரந்தெரிந்த வில்லிகள் என்றுபெயர். அப்படையில் ஒரு சிறந்த வில்வீரன் இருந்தான். அவனுக்குச் சோழன் குன்றன் என்று பெயர். அவனுடைய சிறப்புப்பெயர் அவனி நாராயணப் பல்லவரையன் என்பது. திருநாகேசுவரர் கோவிலுக்கு உள்ள தேவதான நிலங்கள் தரிசாகக் கிடந்தன. ஆகையால் இறைவனுக்குரிய நிவேதனம் குறைந்தது. அக்குறையை நிறைவிக்கவும், மார்கழித் திருவாதிரையில் சிறப்புப் பூசனை வழிபாடுகளுக்காகவும், திருவெம்பாவை விண்ணப்பித்தற்காகவும் சோழன் குன்றன் இரண்டு 'ஆனை அச்சு' நிபந்தமாக அளித் தான். இதனுல் பாண்டி நாட்டில் திருவெம்பாவை ஓதப்பட்டமை தெளிவு.

## முடிப்புரை

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை தமிழ்நாடு முழுவதும் பல நூற்ருண்டுகளாக மார்கழித் திருவாதிரை நாட்களில் ஓதிவந்த செய்திகள் மேலே கண்ட கல்வெட் டுக் குறிப்புக்களால் அறியப்பட்டனவாம். கடல்கடந்த கீழை நாடுகளாகிய கடாரம், சாவகம், சயாம் முதலிய நாடுகளிலும் திருவெம்பாவை பரவியது மகிழத்தக்கதாம்.